gistered as a news paper. பக்கங்கள்: இருபத்திரண்டு விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

லர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 08 (01.01.2004) வியாழக்கிழமை இதழ் :92

நல்லி சில்க்ஸ்
121/1 மின்சார நிலைய வீதி , யாழ்ப்பாணம்.
கல்யாணப்பட்டுப் புடவைகளின் கைராசி நிறுவனம்
☆ திருமணப் பட்டுச் சாறிவகைகள்
☆ சோளி கிற்
☆ சேட்டிங்
☆ ஸ்கேட் & பிளவுஸ்
☆ கவுண்
☆ சல்வார் கிற்
☆ இந்தியன் சாறி வகைகள்
☆ பேபி சூட்
☆ சிறுவர் சிறுமியருக்கேற்ற றெடிமேட் ஆடைகள்
மற்றும் அனைத்து ஜவுளித் தெரிவுகளுக்கும் வருகை தாருங்கள்

# க்களின் ஆணையையும் அதிகாரத்தையும் பெற்ற அரசாங்கத்துடன்தான் புலிகள் பேச்சு நடத்துவர்!

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களின் ஆணையைப் பெற்ற, முழு அதிகாரமுள்ள அரசோடுதான் இனிமேல் விடு தலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடத்துவார் ளென விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோ கரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தன்னிடம் தெரிவித்ததாக அமைச் சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தை தான் சந்தித்தபோதே, அவர் இதனைத் தெரிவித்ததாக அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது ஒரு தரப்பாகவும் பாதுகாப்புத்துறை வேறொரு தரப்பிலும் இருப்பது பேச்சுவார்த்தைக்கு நடை முறைச்சாத்தியமற்றது. இதனையே நோர்வே உட்பட சர்வதேச நாடுகள் ஏற்றுள்ளன.

யுத்தநிறுத்தம் ஏற்படுவதற்கு முன்னரே சமாதானத்திற்கான சந்தர்ப்பத்தை அரசுக்கு புலிகள் ஏற்படுத்தியிருந்தனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சமாதானப் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட்ட பின்னர், புலிகள் முழு மையான ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்கள்.

அதேவேளை, விடுதலைப் புலிகளின் இரு பது வருடகாலப் போராட்டத்தின் மூலம் பெறும் தீர்வு, தமிழ்மக்களின் முழுமையான அபிலா ஷைகளைப் பூர்த்திசெய்வதாக அமையவேண் டும் என பாலசிங்கம் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையின் இறுதிநிகழ்ச்சி நிரலில் மலையக மக்களின் பிரச்சினையும் உள்ளடக்கப்படவேண்டுமென அமைச்சர் சந் திரசேகரன் கேட்டபோது - சகல தமிழ்மக் களையும் ஒன்றிணைக்கும் மலையக மக்கள் முன்னணியின் முயற்சியை புலிகள் ஆதரிப்ப தாகவும் பாலசிங்கம் குறிப்பிட்டார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக அமைச்சர் சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் ஆகியோர் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் சுமார் ஒன்றரை மணித்தியாலங்களுக்கு மேலாகக் கலந்துரையாடினர்.

# பேச்சுக்கள் தாமதமடைவதற்கு சந்திரிகா காரணமில்லையாம்!

## அமெரிக்க அமைச்சரின் குற்றச்சாட்டுக்கு ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் மறுப்பு

(கொழும்பு)

**அரசியல் நெருக்கடி தொடர்வதால், சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நம்பிக்கைகள் தளர் வடைந்து செல்வதை அனுமதிக்க முடியாதென, அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ச்சர்ட் ஆர்மிரேஜ் தெரிவித்த கருத்துக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிராகரித்துள்ளார்.**

ஜனாதிபதி சந்திரிகாவின் ஊடகப் பணிப் ளர் ஜனதாஸ பீரிஸ் இது தொடர்பாகத் ரிவிக்கையில் -

ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள் லம் சமாதானப் பேச்சவார்த்தைகள் தாமத டைவதாக றிச்சர்ட் ஆர்மிரேஜ் தெரிவித்த ருத்துக்கள் ஆதாரமற்றவை.

சமாதான முயற்சி தொடர்பில் ஜனாதிபதி ின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் சாதகமா தாகவே நடந்து வருகின்றது. சமாதான யற்சியை ஜனாதிபதியுடன் இணைந்து ன்னெடுத்துச் செல்வது பிரதமர் ரணில் விக் ரமசிங்கவின் கடமையாகும்.

அத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தை டைநிறுத்தப்பட்டது கடந்த ஆண்டு ஏப்ரல் மாதமாகும். ஆனால் ஜனாதிபதியினால் பிரத மர் ரணில் தலைமையிலான அரசாங்கத்தி டமிருந்து மூன்று அமைச்சுக்கள் நவம்பர் மாதமே பொறுப்பேற்கப்பட்டன.

ஜனாதிபதி தனது சகல நடவடிக்கைளை யும் சமாதானத்துக்கே அர்ப்பணித்துள்ளார். அத்துடன் பிரதமர் ரணிலுடன் பலவித சமரச முயற்சிகளுக்கு ஜனாதிபதி முன்வந்தார். பாது காப்பு அமைச்சைக்கூட பிரதமரிடமோ அல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இன்றைய 'நமது ஈழநாடு' 22 பக்கங்களில்
புத்தாண்டு சிறப்பிதழ் + வர்ணக்கலண்டருடன்
வெளிவருகிறது.
தவறாது கேட்டுவாங்குங்கள்

## மூன்று நாட்களுக்கு முன்னர் காணாமற்போனோர் வவுனியா – பம்பைமடுவில் சடலங்களாக மீட்பு!

(வவுனியா)

வவுனியா - பம்பைமடு காட்டுப் பகுதியி லிருந்து நேற்று இரு இளைஞர்களின் சடலங் கள் எரிந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப் பட்டன. இந்தச் சடலங்கள் வவுனியா வைத் தியசாலையில் மேலதிக விசாரணைக்காக வைக்கப்பட்டன.

வில்வேந்திரன் ஜஸ்ரின் பெர்னாண்டோ (வயது 24 - தெற்கு இலுப்பைக்குளம்), தெய் வேந்திரம் துஷ்யந்த (வுயது 18 - நெலுக் குளம்) ஆகிய இருவருமே சடலங்களாக மீட்கப்பட்டவர்களாவர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது -

கடந்த மூன்று நாட்களின் முன்னர் வவு னியா - பம்பைமடுப் பகுதியில் மணல் ஏற்று வதற்காக லான்ட்மாஸ்ரரில் சென்ற இரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்த அகதிகள் தலைமன்னார் வருகை!

(மன்னார்)

போர் காரணமாக தமது சொந்த இடங்களை டு இந்தியாவில் அகதிகளாக இருந்தவர் ில் 25 பேர் சிறிய படகின் மூலம் தலை னாரை வந்தடைந்தனர்.

இவர்களில் 10 பெண்களும், 10 ஆண் ளும், 5 சிறுவர்களும் அடங்குவர்.

இவர்கள் சாவற்கட்டு, பேசாலை, தலை ன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களா வர்.

2004 ஆம் ஆண்டின் புதுவருடத்தை மது சொந்த மண்ணில் கொண்டாட வேண் ும் என்ற விருப்பத்துடனேயே தாம் தாயகம் ிரும்பியதாக அவர்கள் தெரிவித்தனர்.(201)

## காணாமற்போன 234 பேரின் விபரம் ஜனாதிபதியிடம் நேற்று கையளிப்பு!

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் 1996 ஆம் 1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போன 234 பேரின் விபரங்கள் நேற்று ஜனாதிபதி சந்திரிகாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் காணாமல் போனோரின் பெற்றோர், பாதுகாவலர் சங்கத்திடம் அவர்களின் விபரங்களை ஒப்படைக்குமாறு கடந்த 22 ஆம் திகதி ஜனாதிபதி செயலகம் கேட்டிருந்தது.

இதனையடுத்தே நேற்று ஜனாதிபதியின் செயலாளரிடம் - அவர்களின விபரங்கள் ஒப்ப டைக்கப்பட்டன. இந்த விபரங்களைச் சமர்ப்பிப்பதற்காக யாழ்.மாவட்டத்தில் காணாமற் போனோரின் பாதுகாவலர் சங்கத்தினர் ஜனாதிபதியிடம் சென்றபோது, ஈ.பி. டி.பி.கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் அங்கு பிரசன்னமாயிருந்ததாகத் தெரிய வருகின்றது. (01)

வாசகர்கள்
விளம்பரதாரர்கள்
முகவர்கள்
படைப்பாளிகள் அனைவருக்கும்
நமது ஈழநாட்டின்
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

## நிமலராஜன் கொலை: சந்தேகநபர் மீதான விளக்கமறியல் நீடிப்பு!

பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய் யப்பட்டுள்ள திருகோணமலையைச் சேர்ந்த எஸ்.ரவீந்திரன் என்பவரின் விளக்கமறியல் இந்த மாதம் 14 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள் ளது. இதுதொடர்பான விசாரணைகள் நேற்று யாழ். நீதிமன்றில் நடைபெற்றபோதே இந்த விளக்கமறியல் நீடிப்பை நீதிபதி இ.த.விக்ன ராஜா வழங்கினார்.

திருகோணமலையில் வைத்து குற்றப்புல

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் ஏப்ரலுக்கு முன் வெளியிடப்படும்!

(கொழுமபு)

நடைபெற்று முடிந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் யாவும் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

நடந்து முடிந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளும் ஏப்ரல் மாதத் திற்கு முன் வெளியிடப்படும்.

2004 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர் தரப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல மாதம் நடை பெறவுள்ளமையாலேயே இந்தப் பெறுபேறுகள் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் வெளியிடப்பட வுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 – 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
mail :- jaffna @ expoavi . com , xesexva tions @ expoavi.com.
(சி -1753)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# யாழ்ப்பாண மாநகரசபை
## பகிரங்க ஏலம்

கீழ்க்காணும் இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு கொடுப்பதற்கு 01.01.2004 ம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மாநகரசபை அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்பட்டுள்ளது. இவ் ஏலத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் ரூபா 2500/= பிணைப்பணம் செலுத்தி ஏலத்தில் பங்குபற்றலாம் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

ஏலத்தில் சித்தி பெற்றவர்கள் அதற்குரிய தொகையின் மூன்றில் ஒரு பகுதியை உடனடியாக செலுத்தத் தயாராக இருக்கவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல. 1 | - 59400/= |
| 02. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல. 7 | - 9630/= |
| 03. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல. 8 | - 5490/= |
| 04. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல. 9 | - 5490/= |
| 05. | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல. 11 | - 3510/= |
| 06. | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல. 12 | - 3510/= |
| 07. | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல. 01 | - 36360/= |
| 08. | குருநகர் ஆட்டிறைச்சிக்கடை | இல. 7 | - 9450/= |
| 09. | கஸ்தூரியார் வீதி து.ச.வ.பா. நிலையம் | | - 49770/= |

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
31.12.2003.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்

(சி/2012)



# கிறிஸ்து யாருக்கு



கிறிஸ்து யாருக்கு கல்விக்கா.
பணத்துக்கா, பெருமைக்கா அல்லது
உயர்ந்த ஸ்தானத்திற்கா,
அழகிற்கா, அழகான ஆடைக்கா,
அல்லது கிறிஸ்தவம் தான் அழிவிற்கா
அல்லது மக்களுக்கா, அல்லது பாவிக்கா

தேவனுடைய சத்தியம் கூறுகிறது தேவனுடைய வார்த்தை ஒரு மனிதனை பாவத்தில் இருந்து புனிதப்படுத்துகிறது மார்க்கு 1-7-8 நல்லவனாக மாற்று இன்று யாழ் குடாநாட்டில் 40 ஆண்டுகள் ஆகியும் உழியத்திற்கு வந்தும் 30 ஆண்டுகள், 20 ஆண்டுகள், 10 ஆண்டுகள் ஆகியும் மக்கள் மத்தியில் எவ்விதமான மீட்பும் இல்லை.

இதற்குரிய விளக்கம் 05-01-2004 பத்திரிகையில் வெளிவரும்.

செபமாலை ஜோன்



(560)



# தேவை

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள JMJ அச்சகத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றார்கள்.

- ☆ முகாமையாளர்
- ☆ புத்தகம் கட்டுனர்
- ☆ அச்சுக் கோப்பாளர்
- ☆ சிற்றூழியர்
- ☆ இயந்திர இயக்குனர்

## மேற்படி பதவிகளுக்கு

(i) 10 வருட அனுபவமும், தகுதியும் உடையவர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(ii) இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.
(iii) சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நேரில் தொடர்புகொள்ள வேண்டிய திகதி 05.01.2004 காலை 9.00 மணிக்கு

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :-
வி.அ.திருநாயகம்
JMJ அச்சகம்
2, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(572)



# நேர்மை - நாணயம் - நம்பிக்கை



நவீன வகையான புதுப்புது டிசைன்களில் கண்ணைக் கவரும் விதத்தில் பெண்களுக்கான சோளி கிற், ஸ்கேட் பிளவுஸ், இந்தியன் சாரி வகைகள் மற்றும் குழந்தைகள் பெரியவர்களுக்கான அனைத்து வகை சேட்டிங், சூட்டிங் றெடிமேட் புடவைகள் அனைத்திற்கும் நாடுங்கள்.

அருண் புடவை மாளிகை
இல 1. கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(சி/1983)


# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியான இசற் வெட்டுப் புள்ளியால் பாதிக்கப்பட்ட கணிதப் பிரிவு மாணவர்கள் அனைவருக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று - இன்று காலை 10.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக மண்டபத்தில் இடம்பெறவுள்ளதால் அனைத்து மாணவர்களும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# வெள்ளத்தில் மூழ்கியுள்ள மரண விசாரணை அதிகாரி அலுவலகம்

(வண்ணை)

யாழ்.போதனா வைத்தியசாலை-திடீர் மரண விசாரணை அதிகாரி அலுவலகம் கடந்த 3 நாட்களாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. அந்தப் பகுதியிலுள்ள நீர் விநியோகக் குழாயில் ஏற்பட்ட வெடிப்பே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால், திடீர் மரண விசாரணை அதிகாரியும், பொதுமக்களும் வெளியில் இருந்தே தமது கடமைகளைச் செய்வதைக் காண முடிகிறது. (111)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

(இணுவில்)

இணுவில் கிழக்கு சிவகாம சுந்தரி சனசமூக நிலையத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது. புதிய நிர்வாகசபையின் தலைவராக ம.யோகானந்தும், பொருளாளராக கை.பரமேஸ்வரனும் தெரிவுசெய்யப்பட்டனர். (ச)


# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

திருநெல்வேலிச் சிவன்கோவில் வீதியிலுள்ள (நர்சிங்ஹோம் அண்மையில்) 1 1/2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- வே.எதிர்மனசிங்கம் 49, 2 ம் ஒழுங்கை பிறவுண் வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணம்.(565)

## தபால் மூலம் சிங்களம்

இப்போது நீங்கள் சிங்கள மொழியை வீட்டில் இருந்தவாறு பேச/எழுத/வாசிக்க/படிக்கலாம். விபரங்களுக்கு எழுதவும் :-வழிகாட்டல் ஆசிரியர் திரு.மல்வான, இல.56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-1994)

நிறைஞ்சனாஸ் சங்கானை
மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
KEOMA
(சி-1846)

ராஜா யாழ்ப்பாணம்.
அனைத்து ரசிகர்களுக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்
இன்றுமுதல்
விஜய், ஜோதிகா, ரகுவரன், கௌசல்யா நடித்த
திருமலை
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-1847)



# அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

மின்சார இணைப்பு பொருட்கள், P.V.C குழாய் வகைகள், அலங்கார மின் விளக்குகள், வானொலிப் பெட்டிகள், மின்விசிறிகள் மற்றும் நவீன மின்சாதனங்களை மிகக்குறைவான விலையில் நீங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

JEGA ELECTRICAL
இல.11 தனங்கிளப்பு வீதி,
சாவகச்சேரி.
(சி-1987)



அனைவருக்கும் IIS இன் இதயம் கனிந்த புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்

# COMPUTER COURSES


New Batches Start
Batch 1 : 03.01.2004
Batch 2 : 05.01.2004
Batch 3 : 14.01.2004
at 10.00 a.m

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
An *Edexcel* Approved Training Centre
Head Office: IIS, 100, Clock Tower Road, Jaffna
Branch: IIS, Nelliyady, Karaveddy
T.P No: 021-222 2831 Email: iis@sltnet.lk



யாழ்.நகரில்

# புதுவருடத்தை முன்னிட்டு விசேட சலுகை



NP 7160/7161
Canon

## புத்தம் புதிய Canon Photo Copier இயந்திரம்

உங்களின் பழைய போட்டோக் கொப்பி இயந்திரங்களை உச்சவிலைக்கு கொள்வனவு செய்வதுடன், அதனை எமது Canon NP 7161 போட்டோக்கொப்பி இயந்திரங்களின் விலையில் கழித்து மிகுதிப் பெறுமதிக்கு மாத்திரம் VAT, TAX என்பவற்றுடன் விற்பனை செய்ய முன்வந்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



NP 1215 Canon Photo Copier விற்பனைக்குண்டு

பயிற்றப்பட்ட தொழிநுட்பவியலாளர்களின் பராமரிப்பு சேவை Canon நிறுவனத்தின் உத்தரவாதப் பத்திரத்துடன் Canon Photo Copier இயந்திரத்தைப் பெறுக்கொள்ளலாம். Original part's

தொடர்பு: நவகலா
மெட்ரோ பொலிட்டன் விற்பனை முகவர்
200, K.K.S. றோட், யாழ்ப்பாணம். T.P:- 021-2225462

# சட்டத்தையும், ஒழுங்கையும் நாமே பாதுகாக்கவேண்டும்!

## வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் தெரிவிப்பு



நாங்கள் அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம், மனித உரிமை மீறல் பற்றி குற்றம் கண்டு பேசினோம். இன்று என்ன நடக்கிறது? அவசர காலத தடைச்சட்டம் இல்லை. படையினருடைய அதிகாரம் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. பொலிஸார் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவுள்ளனர். பயங்கரவாதத் தடைச்சட்டம் மூலம் பொலிஸாருக்கே அதிகாரம் உள்ளது. இதனை நாம் கவனத்திலெடுத்து சடடத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டும். ஏனைய மாவட்டங்களைவிட வவுனியா மாவட்டம் வித்தியாசமாகவே உள்ளது. பொலிஸார் சட்டத்தை கவனத்தில் எடுத்து செயற்படுகின்றனர் என, வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிவான் இளஞ்செழியன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை - வவுனியா நீதிமன்ற கட்டடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2001 ஆம் ஆண்டு வரை வவுனியா மாவட்டத்தில் அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை இருந்தது. இது எந்தச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டது. படை அதிகாரிகள் சிலரின் வாய்வழி உத்தரவால்தான் இது நடைமுறையில் இருந்தது. இதற்கெதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை சட்ட விரோதமானது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதே போல் - கடந்த தேர்தலில் வன்னி மக்களில் ஒரு பகுதியினர் வாக்களிக்க தடைபோடப்பட்டது. இது விடயமாகவும் வழக்குத்தாக்கல் செய்தபடியால், பயனுள்ள தீர்ப்பொன்று கிடைத்துள்ளது. வாக்களிக்கத் தடைவிதித்தது சட்டவிரோதமான செயலெனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சட்டம் மிகவும் புனிதமாக வரையப்பட்டுள்ளது. நல்லெண்ண செயற்பாடுகளுக்காகக்கூட சட்டவிரோதமாகச் செயற்படமுடியாதென அவர் மேலும் தெரிவித்தார்.(03)

### மத மாற்றத்துக்கு எதிராக பிக்குமாரின்

## உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது

பௌத்த மதத்திலிருந்து ஏனைய மதங்களுக்கு மக்களை மாற்றுவோருக்கு எதிராக, சட்டம் கொண்டுவரப்படவேண்டும் எனக் கோரி, ஓமல பி.சோதவித தேரரின் தலைமையில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

உண்ணாவிரதம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற பௌத்த சாசன அமைச்சர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார, அமைச்சர் கரு ஜெயசூரிய ஆகியோர் எதிர்வரும் 14 நாட்களுக்குள் மதமாற்றச் சட்டத்திற்கான வர்த்தமானி அறிவித்தலை விடுப்பதாக உறுதிமொழி அளித்ததையடுத்தும், இதற்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிப்பதாக கொடுத்த வாக்குறுதியையும் அடுத்தே இந்த உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது. (01)

## தேர்தல் சீர்திருத்த ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை அடுத்த மாதம்

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது திட்டவரைபை அடுத்த மாத இறுதிக்குள் இறுதி செய்துவிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட தேர்தல் சீர்திருத்தம் குறித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன - அரசியல் கட்சிகளிடம் இருந்தும், பொதுமக்களிடம் இருந்தும் தேர்தல் சீர்திருத்தம் குறித்த கருத்துக்கள் திரட்டப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு - உள்ளூராட்சி, மாகாணசபை நாடாளுமன்றத் தேர்தல்கள் மூன்றையும் ஒன்றாக நடத்துவது குறித்து சிபார்சு செய்துள்ளது.

### ஹில்டன் ஹோட்டல் மோசடி குறித்த

### அறிக்கை, ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு

## சட்ட மா அதிபர் பொலிஸ் மா அதிபருக்கு பணிப்பு

கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டட நிர்மாணம் தொடர்பான விடயங்களில்- ஒழுங்கீனங்களும், நிதி மோசடிகளும் நடைபெற்றுள்ளமை தொடர்பான குற்றச்சாட்டின்பேரில் நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி மற்றும் பிரதமரின் ஆலோசகர் ஆர். பாஸ்கரலிங்கம் ஆகியோர்மீது குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில், நடவடிக்கை எடுக்கத் தேவையான ஆவணங்கள், அறிக்கைகள் ஆகியவற்றை சமர்ப்பிக்குமாறு, சட்டமா அதிபர் - பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வாவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஹில்டன் ஹோட்டலின் கட்டுமானம் தொடர்பான விவகாரத்தில் - கட்டப்படாத தளங்களுக்கான கொடுப்பனவாக ஜப்பானிய நிறுவனமொன்றுக்கு 200 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளதாக இவர்கள்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது என, அரச தொலைக்காட்சி நிறுவனம் தெரிவித்தது.,

லங்கா ஹோட்டல் அபிவிருத்தியாளர் நிறுவனத்தின் பிரதான பங்குதாரராக அரசாங்கமேயுள்ளது. அரசாங்கமே ஹில்டன் ஹோட்டல் திட்டத்திற்கும் பொறுப்பானதாகும்.

இந்த மோசடி மற்றும் ஒழுங்கீனங்கள் சொக்ஸி - இந்த நிறுவனத்தின் இயக்குநராக இருந்தபோதே நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவே, குறிப்பிட்ட மோசடி தொடர்பான தகவல்களைத் தெரிவித்துள்ளது.

## கருணாநிதியின் கோரிக்கை ஏற்பு பிணையில் வெளிவர வைகோ முடிவு

(சென்னை)


தி.மு.க. தலைவர் கருணாநிதியின் வேண்டுகோளை ஏற்று, பிணையில் வெளியேவர வைகோ முடிவு செய்துள்ளார்.

ஆரம்பத்திலிருந்தே பிணைகோர மாட்டேன் என வைகோ கூறிவருகிறார். ஆனால், வைகோ பிணையில் வெளியேவரவேண்டும் என்பது என் அன்புக் கட்டளை எனக் கருணாநிதி கூறியிருந்தார். வெளியே வந்து நிறைய அரசியல் பணிகளை ஆற்றவேண்டிய கடமை வைகோவுக்கு உண்டு என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் - நேற்றுமுன்தினம் பூந்தமல்லி பொடா நீதிமன்றத்தில் வைகோவை நிருபர்கள் சந்தித்தனர். அப்போது, கருணாநிதியின் கோரிக்கை குறித்து கேட்டபோது-

கடந்த ஆண்டு ஜுலை 12 ஆம் திகதி வேலூர்சிறையில் என்னைச் சந்தித்த நிருபர்கள் பிணையில் வெளியே வருவீர்களா என்று கேட்டார்கள், வரமாட்டேன் என்று கூறினேன், அதில் உறுதியாக இருப்பேன் என்றேன், உறுதியாகவே இருந்தேன்.

பின்னர் என்னை கருணாநிதி சந்தித்து, பிணையில் வெளியே வா என்று வற்புறுத்தினார். அப்போதும் என் நிலைப்பாட்டை எடுத்துச் சொல்லி, பிணைகோர மறுத்துவிட்டேன்.



இப்போது, மீண்டும் நானும் என் சகாக்களும் பிணையில் வரவேண்டும் என்று அவர் கூறியிருப்பது, அவரது பாசத்தைத்தான் காட்டுகிறது. இந்த வேண்டுகோளை அன்புக் கட்டளையாக ஏற்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்.

இன்றைய அரசியற் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கருத்திற்கொண்டே, கருணாநிதி மீண்டும் இவ்வாறு கூறியிருப்பதாக நினைக்கிறேன். என்னைப் பொறுத்தவரை கருணாநிதியின் அன்புக்கட்டளையை மதிக்கத் தயார். கட்சியின் நிர்வாகிகளுடன் பேசி, விரைவில் இது குறித்து முடிவெடுப்பேன் என்றார்.

தடைசெய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாகப் பேசியது பொடா சட்டத்தின்கீழ் குற்றமல்ல என உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. இதன் அடிப படையில் பிணைமனுத் தாக்கல் செய்த தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனுக்கு பொடாவில் பிணை கொடுக்கப்பட்டுவிட்டது.

மேலும் பொடாவில் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்தவர்கள் பிணை கோரினால் அதை சாதாரணமான வழக்காகவே கருதி பிணை வழங்கலாம் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது. இதனால், வைகோவும் பிணை கோரினால் நிச்சயம் விடுதலையாகலாம் என்ற சூழ்நிலை நிலவுகிறது.

இதனிடையே - பொடா மறு ஆயவுக்குழு - எதிர்வரும் 7 ஆம் திகதி டெல்கியில் கூடுகிறது. 9 ஆம் திகதி இந்தக் கூட்டம் முடிவடையும். இதில் கைகோவை மறு ஆய்வுக் குழு விடுதலை செய்துவிட்டால், உடனே அவர் வெளியே வந்துவிடமுடியும்.

அவ்வாறு இல்லாமல், பொடா ஆய்வுக்குழு முடிவேதும் எடுக்காமல் போனால், பிணை கோரி வைகோ சார்பில் மனுத் தாக்கலாகலாம் எனத் தெரியவருகிறது.

### கைதுசெய்யப்பட்ட தமது மகன் மீது

# தவறான குற்றச்சாட்டுக்களை சுமத்த இராணுவத்தினர் முயன்று வருகின்றனர்

### யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றபோது கைதுசெய்யப்பட்ட தனது மகன்மீது, தவறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்த இராணுவத்தினர் முயன்று வருவதாகத் தெரிவித்து, தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

எழுதுமட்டுவாள் பகுதியிலுள்ள 522 ஆவது கஜபாகு படைப்பிரிவில் கடமையாற்றிய, கண்டி பூஜாபிட்டி தொலபில்ல பகுதியைச் சேர்ந்த, அசோக லக்ஸ்மன் ரணசிங்கா (வயது 19) என்ற இராணுவச்சிப்பாய் கடந்த ஓகஸ்ட் மாதம் இராணுவத்திலிருந்து தப்பியோடியிருந்தார்.

பின்னர் இவர் ஒக்ரோபர் 16 ஆம் திகதி மின்னேரியாப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டார். அங்கிருந்து அழைத்துவரப்பட்ட இவர், கொடிகாமம் பொலிஸார் மூலமாக நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுத் தற்போது யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தப்பியோடும்போது, ரி-56 ரக துபாக்கியுடனும், நான்கு மகசீன்களுடனும் தப்பியுள்ளதாகவே இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஆனால், இது தனது மகன்மீது சுமத்தப்பட்டுள்ள பொய்க்குற்றச்சாட்டெனத் தெரிவித்துள்ள அவரது தந்தையார், சக சிப்பாய்களுடன் ஏற்பட்ட தகராறை அடுத்து அவர்களைக் கைகளால் தாக்கிவிட்டே தனது மகன் தப்பியோடியுள்ளதாகச் சிறையிலிருந்த மகன் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகிய பின்னரே, இராணுவத்தில் சேர்ந்த இவர், தப்பியோடியபோது மின்னேரியாவில் வைத்து இராணுவத்தின் உயர்மட்டத்திலுள்ள இவரது உறவினர் ஒருவராலேயே கைது செய்யப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தாம் எத்தனையோமுறை தடுத்தும் தமது பேச்சைக்கேளாமலேயே மகன் இராணுவத்தில் இணைந்ததாகத் தெரிவித்த அவரது பெற்றோர் - தாம் யுத்தத்தை வெறுப்பதாகவும், வடபகுதி தமிழ்மக்கள் கேட்கும் உரிமையில் நியாயம் இருப்பதை உணர்ந்துகொள்வதாகவும் தெரிவித்தனர்.

தென்பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர் ஒருவர், யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தமை இதுவே முதற்தடவையெனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த முறைப்பாடு தொடர்பான ஆரம்பக்கட்ட விசாரணைகள்- நேற்று யாழ். மனிதஉரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்றன.

இந்த விசாரணையில் - இராணுவத்தினரின் சட்ட ஆலோசகர் கப்டன் குறூப் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அரசு - புலிகள் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களும் சேர்க்கப்பட வேண்டும்!

### முன்னாள் அமைச்சர் பௌசி

(சென்னை)

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் - முஸ்லிம்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக, முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏம்.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

இந்திய குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் அண்ணன் முத்து முகம்மது மீரான் வீட்டுக்குச் சென்றிருந்த அமைச்சர் பௌசி, அங்கு செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

முடங்கிப்போயுள்ள பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும். அதில் முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகளும் சேர்க்கப்படவேண்டும் எனவும், பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




# ஒருதொழிலுக்கான முதலீடுகளும் முயற்சியும் எப்படி அமையவேண்டும்



ஒரு தொழிலைத் தொடங்கும்முன், அதற்கான முதலீட்டை எப்படிப் பெற்றுக்கொள்வது. அதனை எந்தமுறையில் ஈடுசெய்வது என்பதை முதலில் சிந்திக்க வேண்டும். தொழில் என்பது - அதற்கான முதலீடு எப்படி அமையவேண்டும் என்பதில்தான் தங்கியுள்ளது. ஒரு சிறுதொழிலையோ அல்லது பாரியதொழிலையோ நாம் செய்யத் தொடங்கும் போது, முக்கியமாக - இலாபத்தினையே கருத்திற்கொள்வோம். நூற்றுக்கு ஒருவீதம் ஆயினும் இலாபமில்லாது, எவரும் தொழில் என்பதைச் செய்வதேயில்லை அதனால் தான், தொழில் தொடங்கும் முன் அதற்கான முதலீட்டைச் சரியான முறையில் தீர்மானித்து முதலீடு செய்யவேண்டும் என்பதில் அனைவரும் சிரத்தை கொள்கின்றனர்.

முதலீட்டுக்கான நிதியுதவியினைப் பெறமுன்பு, அந்த நிதியினைப் பெறுவதற்கு ஏற்படும் செலவு, காலதாமதம், விதிமுறைகள், நிதியைத் திருப்பிச்செலுத்தும்முறை அதற்காக மேற்கொள்ளவேண்டிய சிறப்புமுயற்சிகள் என்பவற்றை படிமுறையாக ஆழ்ந்து சிந்தித்த பின்பே முயற்சியில் இறங்குவார்கள். தொழில் ஒன்றினைத் தொடங்கும் முன்பு அதற்கான நிதியைத் திரட்டுவதில் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேண்டியது தொழில் ஆரம்பிப்போரின் முக்கிய கடமை ஆகும். நிதியினை எளிதாகப்பெற்றுக் கொள்ளக்கூடிய முறைகளையும், அப்படி எளிதான முறையில் எங்கிருந்தெல்லாம் நிதினைப் பெற்றுக்கொள்ளமுடியும் போன்ற விபரங்களையும், வட்டிக்கடனாயின் குறைந்த வத வட்டியுடன் பணம் பெறக்கூடிய இடங்களையும் இனங்கண்டு கொள்ளவேண்டும்.

இப்படி இனங்காண்பதற்கு நீங்கள் முனைகையில் சில ஏமாற்றுப் பேர்வழிகளிடமும் அகப்படக்கூடும். அப்படி அகப்படுவது என்பது - யாரும் தெரிந்துகொண்டு அகப்படுவது என்பது கருத்தல்ல. சாதுபோல் தம்மை இனங்காட்டிக் கொண்டு பைக்குள் கையை வைக்கும் பேர்வழிகளாகவே அவர்கள் இருப்பார்கள். உதாரணமாக 2 வீத வட்டியுடன் கடன் வழங்குவதாகப் பிரசாரம் செய்வார்கள். கொள்ளை இலாபம்தானே என பலர் குவிந்துகொண்டு கடன் பெறுவர். சராசரியாகப் பெறப்படும் தொகையில் - கழிவு, கூட்டல், கழித்தல் என 4 வீத வட்டியுடன் கடன் பெற்றளவிற்கு வட்டிவாங்கி, கையை வருடிவிடுவார்கள். இது ஒரு எதிர்பாராத நிகழ்வாகவே இருக்கும். இப்படியான பேர்வழிகளிடம் ஏராளமானவர்கள் சிக்கி, தம் தொழில்முதல் முழுவதையும் இழக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. இது பொதுவாகத் தனியாரிடமே காணப்படும் செயற்பாடு. எனவே, இப்படியாகக் கடன் பெறப்போகிறீர்களாயின், உங்களை உசார்படுத்திக் கொள்ளுங்கள். கையொப்பம், எழுத்துமூல வாக்குறுதி இவைகளைப் பெற்றுக்கொள்ளத் தவறவேண்டாம். இவற்றை நீங்கள் எழுத்துமூலம் பெற்றுக்கொள்வதனால், உங்கள் பக்கம் பாதுகாப்பு. அதிகமாவதோடு, உங்கள் தொழிலையும் அதற்காகச் செய்யும் முதலீட்டையும் பாதுகாத்துக்கொள்ள முடியும். அதைவிட, தொழிலில் கிரமமாக ஈடுபடமுடியும். அதாவது, தொடர்ந்தும் அந்தத் தொழிலைச் செய்யக் கூடியதாக இருக்கும். அதனை விட, எந்தச்சந்தர்ப்பதிலும் கடன் என்ற பயத்திற்கு ஆளாக வேண்டியநிலை இருக்காது. இதனை விட, மாதாமாதம் நீங்கள் வட்டி செலுத்துபவர்களாக இருந்தால், உரிய நேரங்களில் அவற்றை உரியமுறையில் பதிவுசெய்து, வைத்துக் கொள்ளுங்கள். இது உங்களை ஏமாற்றும் சந்தர்ப்பங்களில் கை கொடுப்பதாக இருக்கும். சரி - கடன் பெற்ற முதலீட்டை எப்படி நீங்கள் சரியானமுறையில் பயன்படுத்தப் போகிறீர்கள்- நீங்கள் தொடங்கப்போகும் தொழிலில் முதலிலேயே உங்களுக்கு ஒரு திட்டம் இருக்கும். அதாவது அந்தத் தொழிலை முதலில் எப்படி ஆரம்பிப்பது, எப்படிச் சந்தைப்படுத்துவது, பணியாட்களை எப்படி நியமிப்பது அல்லது நீங்களாகவே மேற்கூறிய அத்தனை செயற்பாடுகளிலும் ஈடுபடவேண்டியது எனத் தீர்மானித்தால், அதற்குரிய நேரததை எப்படி ஒழுங்குபடுத்துவது எனத்தீர்மானித்துக் கொளளுங்கள். முதலீட்டினை உரியபகுதிகளுக்குப் பகிர்ந்து சமப்படுத்திக் கொள்ளுங்கள். ஒவ்வொரு பகுதியின் வரவு- செலவை முதலிலேயே திட்டமிட்டுக் கொள்ளுங்கள். குறித்த ஒருவிலை, அதற்கான செலவு, இலாபம் என்பவற்றைத் தீர்மானித்து, முதலினைப் பகிர்ந்துகொள்ளுங்கள். பணியாட்கள் சம்பளத்தினை, முதலின் ஒருபகுதியாக எடுத்துக்கொண்டு, இலாபத்தில் சமன்படுத்திக்கொள்ளுங்கள். இப்போது திட்டங்களை உரியமுறையில் வகுத்துவிட்டீர்கள் என்று வைத்துக்கொள்ளுவோம் -

உங்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தி, விற்பனை செய்வதற்குத் தயாராக இருப்பீர்கள். இதற்கும் நீங்கள் முதலீட்டைக் கவனத்தில் கொண்டே செயற்படவேண்டும். சந்தர்ப்பம் சூழலைப் பயன்படுத்தியே உங்கள் உற்பத்திப் பொருட்களைச்சந்தைக்கு விடவேண்டும். பின்னர் தொடர்ச்சியாக அது நிலைத்துக்கொள்ளும் அளவிற்கு பார்த்துக்கொள்ளவேண்டும். அதாவது, அதன் தரம், சிறப்பு போன்வற்றை நிலைநிறுத்திக்கொள்ளக்கூடியளவிற்கு முயற்சியைச் செலவு செய்யுங்கள்.

இதற்கும் முதலீடு என்பது மிக முக்கியமான ஒன்றாக வேயுள்ளது. விளம்பரம், தரம்குன்றாது பார்த்துக்கொள்ளல் அதாவது தொடர்ந்தும் ஒரே உற்பத்தித் தரத்திலேயே பொருட்களை உற்பத்திச்செய்தல். இவை கட்டாயம் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம்.இதற்கும் போதியளவு நிதியையும், நேரத்தையும் செலவிடவேண்டியது அவசியம். உங்களுக்கு நம்பிக்கையானவர்களிடம் மாத்திரமே நிதி சம்பந்தமான தொடர்புகளை வைத்துக் கொள்ளுங்கள். சில சந்தர்ப்பங்களில் நிதி மோசடிகள்கூட இடம் பெறலாம். பணவிடயத்தில் நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதே சிறந்தது.

முதலில் நீங்கள் ஒரு - சிறிய தொழில் முதலாளியாக இருக்கலாம். அந்த வளர்ச்சியே கால ஓட்டத்தில் உங்களை ஒரு பெரிய முதலாளி ஆக்கமுடியும். அப்படியான ஒரு உயர்ந்த இடத்திற்கு நீங்கள்வரும்போது, நிறைய தொழில் ரீதியான சவால்களையும் எதிர்கொள்ளவேண்டிவரும். அவற்றை எப்படிச் சமாளிப்பது என்பதனை திட்டமிட்டு செயல்படுத்துங்கள்.

உதாரணமாக - உங்களின் உற்பத்திப் பொருளிற்கு எதிராக அதே மாதிரியான உற்பத்திப் பொருள் ஒன்று, மிகவும் கவர்ச்சியான முறையில் சந்தைக்கு வரலாம். அவற்றை எதிர்த்து உங்கள் உற்பத்திப்பொருள் நிற்கக்கூடிய வகையில் சந்தைப்படுத்தல், தரம், நம்பிக்கை, வாடிக்கையாளர் என்பவற்றை நிலைநாட்டிக் கொள்ள எத்தனியுங்கள். இது சிறு உற்பத்திப் பொருளாகவோ அல்லது பெரும் அளவிலான உற்பத்திப் பொருளாகவோ இருக்கலாம். இரண்டிற்கும் முக்கியமான ஒன்றாகவே இது காணப்படுகின்றது.

எனவே, உங்கள் தொழில் முயற்சிக்கு முதலில் திட்டத்தினை வகுத்துக் கொள்ளுங்கள். மூலதனத்தினை முதல் படியாக கவனத்தில் கொள்ளுங்கள். உங்கள் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் தொழிலின் உயர்ச்சிக்கு உரியதாக இருக்கும் அளவிற்கு, தொழிலில் உங்களை ஸ்தம்பிதப் படுத்திக் கொள்ளுங்கள்.

அப்போதுதான் உங்கள் மூலதனத்திற்கு ஏற்ற இலாபத்தினை நீங்கள் பெறுவதோடு தொழிலில் எதிர்பார்த்த வெற்றியினையும் அடைவீர்கள்.

இரா.காயத்திரி

## வாரம் ஒரு சிறுதொழில்

## சவ்வரிசி செய்யும் முறை

(சென்றவாரத்தொடர்ச்சி...)

பாலாக்ப் பிழிந்து எடுத்துக்கொண்ட மரவள்ளிப் பாலுடன், தண்ணீா விட்டு நன்றாகக் கலக்கக் கொள்ளவேண்டும். நன்கு கலக்கப்பட்ட பிறகு, அது வெண்மையாகப் பால்போன்று இருக்கும். அந்தப் பாத்திரத்தை நன்றாக மூடி, பத்திரப் படுத்தி வைக்கவேண்டும்.

பினனர் ஒருநாள்வரை பாத்திரத்தை அப்படியே மூடிவைக்கவேண்டும். மறுநாள் எடுத்துப்பார்க்கும் போது, மரவள்ளிமா பாத்திரத்தின் அடிப்பாகத்தில் படிந்திருக்கும். தண்ணீா தெளிந்த நிலையிலும் இருக்கும். அந்த தெளிந்தநீரை மெதுவாக வடிகட்டிவிடவேண்டும்.

தண்ணீா வடிகட்டப்பட்டபிறகு, கெட்டியாகத் தெரியும் மாவின்மீது மஞ்சள் நிறத்தில் ஆடை படிந்திருக்கும். மெல்லிய சிறிய கரண்டியின் உதவியினால், அந்த ஆடையினை வழித்து அகற்றி விடவேண்டும். இப்படிப் பாத்திரத்தின் அடியில் படிந்திருக்கும் மாவினைக் கவனித்தால், அது வெண்ணெய் போன்று இருக்கும்.

பாத்திரத்தின் அடியில் பதிந்திருக்கும் மாவைச் சுத்தமான வெள்ளைத் துணியில் எடுத்துவைத்து மூட்டையாகக் கட்டித் தொங்கவிட்டால், மாவிலுள்ள நீர் வடிந்துவிடும். பின்னர், முக்கால் அங்குல அளவு சதுரமுள்ள மரச்சட்டத்தைக் கொண்டு, இரண்டு அடி நீளம், ஒரு அடி அகலத்துக்கு ஒரு சட்டம். தயார்செய்து கொள்ள வேண்டும். இந்தச் சட்டத்தின் மேற்பக்கமாக உறுதியான- ஆனால், மிகவும் மெல்லிய ஒரு துணித்துண்டைப் பரப்பி, நன்கு இழுத்து சட்டத்தில் நான்குபுறமும் ஆணி அடித்து சல்லடைபோன்று செய்துகொள்ளவேண்டும். இந்தச் சல்லடையின் மத்திய பாகத்தில் துணியில் இலேசான தொய்வு இருக்கவேண்டும்.

மா, ரவை போன்றவற்றை அரித்து எடுக்கும் பெரிய கண்ணுள்ள சல்லடையை எடுத்துக்கொள்ளவேண்டும். அந்தச் சல்லடைக்குள் மரவள்ளிக்கிழங்கு மாவைக் கொஞ்சம் அள்ளிப்போட்டு, முன்பு தயார் செய்து வைத்திருக்கும் துணிச் சல்லடைக்குமேலாகப் பிடித்துக் கொண்டு, இலேசாகத் துழாவினால், சல்லடைக் கண்கள் வழியாக மரவள்ளிக்கிழங்கு மா கீழேயுள்ள துணிச்சல்லடையில் சிறுசிறு துளிகளாக வந்துவிழும். உடனேயே துணிச் சல்லடையை மா அரிப்பதுபோல வேகமாக அசைத்தால், மாத்துணுக்குகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து, சிறுசிறு உருண்டைகள் ஆகிவிடும்.

அந்த உருண்டைகளை ஒரு தட்டில் கொட்டிவிட்டு, மறுபடியும் சல்லடையில் மரவள்ளிக்கிழங்கு மாவை அள்ளிப்போட்டு மேற்கூறியதுபோல் உருண்டைகளாக்கிக்கொள்ளவேண்டும்.

இப்படியே முழு மரவள்ளிக்கிழங்கு மாவையும் உருண்டைகளாக்கிக்கொள்ளவேண்டும். பின்னர், அந்த உருண்டைகளை வெள்ளைத் துணியில் போட்டு நிழலில் உலர்த்தவேண்டும். உலர்ந்த பிறகு, ஒரு இரும்புச் சட்டியை அடுப்பில் ஏற்றி இலேசாக எண்ணெய் தடவி, உலர்ந்த சவ்வரிசியில் நான்கு கைபிடி அளவு போட்டு, தட்டையான கரண்டியால் நன்கு கிழறிவிட வேண்டும். இவ்வாறு செய்யும்போது, சவ்வரிசி சிவந்து விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு செய்வது சவ்வரிசியினைக் கெட்டிப் படுத்துவதற்காகவே.

பின்னர், சவ்வரிசியினைச்சற்று வெயிலில் உலர விட்டு எடுத்துக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்து எடுக்கும் சவ்வரிசி - ஒரேயளவு உருண்டைகளாக இருக்காது. ஆயினும், பெரிய, சிறிய கண்ணுள்ள சல்லடைகளைப் பயன்படுத்தி அளவுகளை வேறுபடுத்தி தயார்செய்து கொள்ளலாம்.

நாம் பார்த்தது சிறிய அளவில் சவ்வரிசியைத் தயார்செய்து கொள்வதையே.

இந்த முறையினைப் பயன்படுத்தி நீங்கள் அதிகளவில் த்யார்செய்து கொள்ளலாம். விற்பனையும் செய்யலாம்.

# வறட்சியிலும் பணம் காய்க்கும் புளி



வடபகுதியானது - உலர்வலயம் என்ற பகுதிக்குள் அடங்குகின்றது. வடபகுதியில் குறிப்பாக, யாழ். குடாவிலும், கிளிநொச்சிப் பகுதிகளிலும் கைவிடப்பட்ட நிலங்கள் அதிகமாக உள்ளன. 'எதற்குமே உதவாது' என்று கைவிடப்பட்ட நிலங்களில் புளியானது புலியாக வளரும் வல்லமை படைத்தது.

புளி நன்றாகப் படர்ந்து வளர்ந்து, பல்லாண்டு பயன்தரும் மரமாகும். எனவே, குறிப்பிட்ட இடைவெளியில் நடவு செய்தல் மிகவும் அவசியம். நெருக்கமாக நட்டால், காய்ப்புக்குறையும். அதிக இடவெளி தந்து நட்டால், குறைவான மரங்கள் தான் இருக்கும். அதனால், ஆண்டுதோறும் கிடைக்கும் புளியின் விளைச்சலும் குறைந்திருக்கும். பொதுவாகப் புளிச் செய்கைக்கு 10மீ x 10மீ இடைவெளி பரிந்துரைக்கப்படுகின்றது. எனவே, 45 செ.மீ. நீளம் x 45 செ.மீ. அகலம் x 45 செ.மீ. ஆழமுள்ள குழிகளை மேற்கூறிய இடைவெளிகளில் தோண்ட வேண்டும். பொலித்தீன் பை அல்லது மண்தொட்டிகளில் வளர்க்கப்பட்ட கன்றுகளில், வீரியமான கன்றுகளைத் தெரிவு செய்யவேண்டும். கூட்டெருவும், ஜிப்சமும் கொண்ட கலவையை - குழிக்குள் இடல் வேண்டும். இந்தக் குழிக்குள் கன்றுகளை நட்டபின்னர், தினந்தோறும் தொடர்ந்து 7 - 10 நாட்களுக்கு நீர் ஊற்றவேண்டும். பின்னர் வாரம் இருமுறை நீரூற்றி கன்றுகளை நன்றாக வளர்க்கவும். நட்ட மூன்றாண்டுகள்வரை இவ்விதம் நீர்வசதி செய்வது இன்றியமையாதது. வளர்ந்த கன்றுகளை நடும்போது, ஓர் உறுதியான குச்சியை ஊன்றி, கயிற்றின் உதவியால் கன்றைக்கட்டி காற்றில் அசையாதபடி செய்ய வேண்டும். இவ்விதம் வளர்ந்துவரும் புளியங் கன்றுகளை, கால்நடைகளிலிருந்து முள் கூண்டுகள் கட்டியோ அல்லது இதர முறைகளிலோ பாதுகாக்கவேண்டும்.

புளி வளர்ந்து பயன்தருவதற்கு ஏறத்தாழ 10 ஆண்டுகள் செல்லும். புளியமரங்களுக்கு இடைப்பட்ட இடைவெளியில் ஏதாவது ஊடு பயிர்களை வளர்க்கலாம். அல்லது கால்நடைகளுக்குத் தேவையான புல் வகைகளை வளர்க்கலாம். புளியமரத்திற்குப் பொதுவாக நீர்பாய்ச்சுவதில்லை. எனினும் நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் 7 - 10 நாட்களுக்கு ஒருமுறை நீரூற்றலாம். ஆண்டுதோறும் மிக நெருக்கமாக வளர்ந்துவரும் மரங்களை படிப படியாக, தகுந்த இடைவெளிகளில் வெட்டி எடுக்கலாம். காய்ப்பிற்குவராத மரங்கள், குறைவாகக் காய்க்கும் மரங்கள், பழங்களை உலுக்குவதற்குச் சிரமமாகவுள்ள மரங்கள் ஆகியவற்றை இனங்கண்டு, அவற்றை வெட்டி அகற்றவேண்டும்.

## அறுவடையும் விளைச்சலும்

சாதாரணமாக ஒரு மரத்திலிருந்து 150 - 200 கிலோ கிராம்வரை பழங்களை அறுவடை செய்யலாம். புளியமரத்தில், காலநிலை மாற்றத்தால் சில ஆண்டுகளில் விளைச்சல் குறைந்திருக்கும். இதனால்தானோ என்னவோ, 'பொங்கும் காலம் புளி, மங்கும் காலம் மா' எனக் கூறுகிறார்கள். ஓர் ஆண்டில் ஹெக்ரயர் ஒன்றுக்கு சாதாரணமாக 15 - 20 தொன் புளியம்பழங்களைப்பெறலாம். பொதுவாக புளிய மரத்தில் பழங்கள் பழுத்ததும் அறுவடை செய்யப்படுகின்றன. 50 வீதம் பழங்கள் பழுத்ததும் முதல் அறுவடை செய்யப்படுகின்றது. பெரும்பாலும் மரங்களில் பழுத்த பழங்கள் கீழே விழுந்ததும் அறுவடையைத் தொடங்குவார்கள். கைதேர்ந்த ஆட்கள் புளியமரத்தி ஏறி, ஒவ்வொரு கிளையாக உலுக்கிப் பழங்களைக் கீழே விழச்செய்வார்கள். உதிர்ந்த பழங்களைக் கைகளால் பொறுக்கி, சணல் சாக்குகளில் சேகரித்து சேமிப்பார்கள். இரண்டாவது அறுவடையிலும் கிளைகளை உலுக்கியே பழங்கள் சேகரிக்கப்படுகின்றன. இதன் பின்பும் உதிராமல் மரத்திலேயே இருக்கும் பழங்களைக் கொழுக்கித் தடியைப் பாவித்துப் பறிப்பார்கள்.

## புளியின் தரங்கள்

**01. உலர்ந்த புளி :** ஓடு நீக்கப்பட்ட புளியை விற்பது பழக்கத்ததில் இருந்து வருகின்றது . உலர்ந்த புளியைப் பொலித்தீன், சணல் சாக்கு, மரப்பெட்டிகள், பனை ஓலைப்பாய்கள் ஆகியவற்றில் அடைத்து விற்கவேண்டும்.

**02. கொட்டையில்லாத புளி :** வெயிலில் பழங்களை உலர்த்தி, கோதுகளை நீக்கியபின் அரிவாள்மனையைப் பாவித்து உள்ளிருக்கும் விதைகளை அகற்றவேண்டும். இவற்றை 500 கிராம் அல்லது 1 கிலோகிராம் பொலித்தீன் பைகளில் அடைக்கவேண்டும். 25 கிலோ கிராம், 50 கிலோகிராம் என எடுத்து, பொலித்தீன் பாதுகாப்பு தந்துள்ள நெருக்கமாகப் பின்னப்பட்ட மூங்கில் கூடைகளிலோ, உள்பகுதியில் பனையோலைப் பாதுகாப்புத்தரப்பட்ட மரப்பெட்டிகளிலோ அடைக்கலாம்.

இவற்றைத்தவிர மரத்திலிருந்து, அறுவடைசெய்து சேகரித்த பழங்களை, வெயிலில் நன்றாக உலர்த்தி ஓடுகளை உடைதது, கொட்டை உள்ள புளியைத் தனித்தெடுப்பார்கள். பழத்தின் மேலேயுள்ள ஓடுகளை சிறு கைத்தடிகளால் அடித்தோ அல்லது கைகளால் உடைத்தோ நீக்குவது வழக்கம்.

உற்பத்திசெய்த பொருட்களைச் சந்தையில் விற்று பணம் பெறுவது வழக்கம். தரம் பிரிக்கப்படாத புளிப் பொருட்களுக்கு, மதிப்புக் குறைந்தே இருக்கும். தரம் பிரிக்கப்பட்டு விற்பனை செய்தல் உற்பத்தியாளருக்கு அதிக பணத்தை ஈட்டித்தருவதுடன், பொருட்கள் நீண்ட காலம் கெடாமல் சேகரிக்கவும் முடிகிறது.

**இ. சற்குணம்**
**தகவல் தொடர்பு மையம், (மாணவர் பகுதி) விவசாயபீடம்.**

# அதிக வருமானம்தரும் கோழிவளர்ப்பு

**கோழி வளர்ப்பினை இலகுவாக மேற்கொள்ளுதல், கோழிகளுக்கு ஏற்படுகின்ற நோய்களைக் கட்டுப்படுத்தல், வளர்ப்பு முறை பற்றிய நுணுக்கங்களை அறிந்து கொள்ளல் போன்றவிடயங்களில் கால்நடை பண்ணையாளருக்கு பயிற்சிகளை வழங்குவதற்காக - வெளிநாடுகளில் பயிற்சிபெற்ற C.I.C நிறுவனத்தின் கால்நடைப் பகுதிக்கான வைத்திய கலாநிதி சுமித்அத்தபத்து, வைத்திய கலாநிதி துஷாரா ஆகியோரைச் சந்தித்து, கோழி வளர்ப்பு பற்றிய சில நுணுக்கங்களைக் கேட்டு அறிந்தோம். அவற்றினைத் தொழில்மலர் வாசகர்களான உங்களுக்குத் தருகின்றோம்.**

சமாதானச்சூழல் ஏற்பட்டதன் பின்னர் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பல இடங்களுக்குச்சென்று, எமது C.I.C நிறுவனத்தினர் கால்நடை பண்ணையாளர்களுக்கு விசேட கருத்தரங்கினை நடத்தி வருகின்றனர். அந்தவகையில், யாழ். மாவட்டத்திற்கு எமது விஜயத்தை மேற்கொண்டுள்ளோம்.

யாழ்ப்பாண பண்ணையாளர்களின் கோழி வளர்ப்பு முறையில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. முக்கியமாக உணவு வழங்கும் முறையில் பிரச்சினை உள்ளது.

கோழிக்குஞ்சுகளைக் கூட்டில்விடமுன் சில விடயங்களைச் செய்யவேண்டும்.

- நேரடியாகக் கோழிக்குஞ்சுகளை நிலத்தில் விடக்கூடாது -

நிலத்தில் குளிர், வெப்பம் என்பவற்றினால் கோழிக்குஞ்சுகள் இறக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.



இதற்கு கோழிக்குஞ்சுகள் விடப்படும் இடத்திற்கு பேப்பர்களைப் போட்டு, அதன் மேலேயே குஞ்சுகளைவிடவேண்டும்.

- இதனைவிட, இட அமைப்பு முக்கியமானது. ஒரு கோழிக்கு 1.2 சதுர அடி இடைவெளி வழங்கப்படவேண்டும். யாழ். மாவட்டத்தில் வெப்பம் அதிகமாகையால், காற்றோட்டம் இருக்கக்கூடியதாக கோழிகளுக்கான கூடுகள் அமைக்கப்படவேண்டும்.
- கோழிக்குஞ்சுகளைக் கொள்வனவு செய்து கொண்டுவரும் பெட்டிகளை உடன் எரித்துவிடவேண்டும். இதன்மூலம், கோழிகளுக்கு ஏற்படும் தொற்றுநோய்த் தாங்கத்தை ஓரளவு தடுக்கமுடியும்.
- கோழிகள் வளர்க்கப்படுகின்ற இடத்திலிலிருந்து, 4 அடி தள்ளிய பிரதேசமும் கட்டாயமாக சுத்தமாக இருக்கவேண்டும்.
- உணவுகள், நீர் என்பன வழங்கப்படுகின்ற பாத்திரம் சுத்தமாகப் பேணப்பட வேண்டும்.
- நீர்ப்பாத்திரத்தினை கோழியின் கழுத்துப் பகுதிவரையில் நிற்கக்கூடியவாறு தொங்கவிடப்படவேண்டும்.

இதுபோன்ற விடயங்களை கலாநிதி சுமித் அத்தபத்து கூறினார்.

கோழிகளுக்கு ஏற்படுகின்ற நோய் பற்றியும் அதனைத் தடுக்கும் முறை பற்றியும், கால்நடை வைத்திய கலாநிதி துஷாரா கூறும்போது -

கோழிகளுக்கு பக்றீரியா நோய், வைரஸ் நோய் போன்றவை தொற்றக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. இவை புறச்சூழலினாலும் ஏற்படக்கூடியனவாகும். உதாரணமாக எலிகளினால் பக்றீரியாவின் தாக்கம் ஏற்படும்.

இதற்கு உடனடியாக உங்கள் பகுதி கால்நடை வைத்தியரிடம் சென்று, அதற்குரிய மருந்தினைப் பெற்றுத் தெளித்துக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இலங்கையில் தற்போது பரவலாகக் காணப்படும் நோய் இக்கோல் (Echol) நோயாகும். இது நீர் சுத்தம் இல்லாமையினாலும், வெப்ப அளவு அதிகம் குறைந்து போவதாலும் ஏற்படும்.

இந்தநோய் ஏற்பட்டால், கோழியின் ஈரல் வெண்மை நிறமாக மாற்றம் அடையும். கோழி தூங்கிக்கொண்டு நிற்கும். இந்தநோய் ஏற்பட்டால் உடனடியாக கால்நடை வைத்தியரிடம் சென்று ஆலோசனை பெற்று, கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். பண்ணையாளர்கள் அனைவரும் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயங்களாக -

- ஒரு பண்ணையில் இருந்து இன்னொரு பண்ணைக்குக் கோழிகளைக் கொணடுசெல்லும்போது, கோழிகள் கொணடு செல்லும் பெட்டிகளை எக்காரணம் கொண்டும் பண்ணைக்குள் கொண்டுசெல்லக்கூடாது.
- ஒரு பண்ணையாளர்கள், மற்றைய பண்ணைக்குள்ளோ அல்லது பண்ணையின் ஏனைய பகுதிகளுக்குள்ளோ செல்லும்போது, கால்களை நன்கு கழுவிவிட்டுச் செல்லவேண்டும்.

தற்போது யாழ்ப்பாணத்தில் கம்போரா நோயின் தாக்கம் அதிகமாக இருப்பதை கால்நடை வைத்தியர்களின்மூலம் அறியக் கூடியதாகவுள்ளது. கம்போரா என்கின்ற இந்த நோய் - புறொயிலர் கோழிகளுக்கு இரண்டு கிழமைகளில் ஆரம்பமாகின்றது. முட்டையிடும் கோழிகள் இந்த நோயினால் தாக்கப்பட்டு அதிகம் உற்பத்தி இழக்கப் படுகின்றது.

இந்த நோய்க்கு ஊசிபோடப்பட வேண்டும். இந்தநோயுள்ள கோழிகள் வெள்ளை கலந்த மலம் கழிக்கும்.

### முட்டையிடும் கோழிகளுக்கு ஏற்படும் பூச்சிநோய்

நீங்கள் வளர்க்கின்ற கோழியின் உடலில் இருந்தபடியே, கோழியின் உடலிலிருக்கும் உணவை உறிஞ்சிக்கொள்கிறது இந்தப் பூச்சி. இதனால், கோழிகளுக்குச் சத்துக்குறைகின்றது. இதன் தாக்கத்தினால், கோழிகள் முட்டையிடுவது குறைவடையும்.

இரத்தக் கழிச்சலும் கோழிகளைப் பாதிக்கும் ஒரு முக்கியமான நோயாகும்- இந்த நோய் ஏற்பட்டாலும் கோழிவளர்ப்பில் பாரிய நட்டம் ஏற்படும். எனவே, கோழி வளர்ப்பில் அக்கறைகொண்ட பண்ணையாளர்கள் கோழிகளை நோய்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள, உரிய நடைமுறைகளை உரியகாலங்களில் கடைப்பிடிக்கத் தவறக்கூடாது என்பதனை அண்மையில் யாழ்ப்பாணம் வருகைதந்த C.I.C. நிறுவன கால்நடை வைத்திய கலாநிதிகள் சுமித் அத்தபத்து, துஷாரா ஆகியோர் தெரிவித்தனர்.

நேர்காணல் - க.தே.புரட்சிதாஸன்

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 80/= | 100/= | 70/= | 60/= | 60/= | 60/= |
| வெண்டிக்காய் | 20/= | 30/= | 40/= | 20/= | 40/= | 20/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 55/= | 65/= | 70/= | 70/= | 60/= | 60/= | 60/= |
| கத்தரிக்காய் | 30/= | 50/= | 80/= | 30/= | 30/= | 40/= | 40/= |
| பாகற்காய் | 60/= | 80/= | 120/= | 60/= | 60/= | 60/= | 80/= |
| கரட் | 25/= | 50/= | 60/= | 35/= | 40/= | 25/= | 60/= |
| பீற்றூட் | 30/= | 40/= | - | 30/= | 40/= | 35/= | [illegible] |
| வெங்காயம் | 40/= | 55/= | 50/= | 30/= | 60= | 40/= | 50/= |
| பச்சை மிளகாய் | 40/= | 35/= | 60/= | 40/= | 60/= | 40/= | 60/= |

# 2003 ஒரு

## ஜனவரி

01 ▸ 2002 இன் சிறந்த தமிழனாக வே. பிரபாகரன் தற்ஸ் தமிழ் இணையத்தளத்தால் தெரிவு.



02 ▸ தாய்லாந்தில் 4 ஆம் கட்டப் பேச்சுக்களில் பங்குபற்ற தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டனர்.
03 ▸ மட்டக்களப்பில் புலிகளின் அலுவலகம் நள்ளிரவு சுற்றிவளைக்கப்பட்டு படையினரால் தேடுதல்.
04 ▸ குடாநாட்டில் வேகமாகப்பரவிய இனந்தெரியாத வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்த, அரச அதிபர் தலைமையில் செயலணிக்குழு அமைப்பு.
06 ▸ தாய்லாந்தின் நொகம்பத்தம் நகரில் அரசு - புலிகள் 4 ஆம் கட்டப் பேச்சுக்கள் ஆரம்பம்.
06 ▸ ஜப்பான் வெளியுறவு அமைச்சர் யொறிக்கோ கவாகுச்சி யாழ். விஜயம்.
07 ▸ பாதுகாப்பு உபகுழுவைக் கலைக்கவும், புனர்வாழ்வு குழு மூலமே மீள்குடியமர்வுப்பணிகளை முன்னெடுப்பதெனவும் தாய்லாந்துப் பேச்சுக்களில் முடிவு.
07 ▸ போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் பிரச்சினைகளை ஆராய மகளிர் உப குழு அமைப்பு.
08 ▸ நோர்வேத்தூதுவர் வெஸ்பேர்க்கை நாட்டைவிட்டு வெளியேற்ற மேல் மாகாணசபை தீர்மானம்.
10 ▸ வலி. வடக்கு மக்களின் ஆறு நாட்களாக தொடர்ந்த மறியல் போராட்டம் இடைநிறுத்தம்.
11 ▸ எத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தினாலும் சமாதானப்பணி தொடருமென நோர்வே பிரதமர் பொண்டவிக் அறிவிப்பு.
12 ▸ பேச்சுக்காக தாய்லாந்து சென்ற புலிகளின் குழுவினர் நாடு திரும்பினர்.
12 ▸ சமாதான முயற்சிகளில் இந்தியா தலையிடாது என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்ஹா தெரிவிப்பு.
15 ▸ யாழ். குடாவில் மீள்குடியமர்வுக்குப் புலிகள் - அரசு ஐ. நா கூட்டுக்குழு அமைப்பு. கிளிநொச்சியில் நடந்த கூட்டத்தில் முடிவு.
16 ▸ வடக்கு-கிழக்கு புனரமைப்புக்கு உதவ உலக வங்கி முன்வந்தமைக்குப் பாராட்டுத் தெரிவித்து தலைவர் பிரபாகரன் வாழ்த்துச் செய்தி வழங்கினார். கிளிநொச்சி சிரான் கூட்டத்தில் 11 திட்டங்களை உடன் ஆரம்பிக்கத் தீர்மானம். அகாஷி தலைமையில் ஜப்பானியக் குழுவும் பங்கேற்பு.
17 ▸ யாழ். பல்கலைக்கழகத்தில் பொங்கு தமிழ் நிகழ்வு.



21 ▸ பிந்துனுவெவ படுகொலை வழக்கில் பிரதிவாதிகள் 23 பேருக்கு விடுதலை, எஞ்சிய 18 பேர் மீதான வழக்குத் தொடரும் என நீதிமன்றம் அறிவிப்பு.
22 ▸ விமானப்படையின் ஆளில்லா வேவு விமானம் அளவெட்டியில் வீழ்ந்து நொறுங்கியது.
22 ▸ சுவிஸ் தூதுவர் கிளிநொச்சில் தமிழ்ச்செல்வனுடன் சந்தித்துப் பேச்சு.
24 ▸ அடுத்த கட்டப் பேச்சு பேர்லினில், நோர்வே அரசு அறிவிப்பு.
28 ▸ கண்காணிப்புகுழு தலைவர் ஹொவ்டே தமிழ்செல்வனுடன் பேச்சு.
28 ▸ உயர்பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு குறித்து ஜெனரல் நம்பியாரின் யோசனை - புலிகள் நிராகரிப்பு.
31 ▸ எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு இரகசிய பயணம்.

## பெப்ரவரி

03 ▸ பேர்லின் பேச்சுக்காக தமிழ்ச்செல்வன் குழுவினர் பயணம்.
04 ▸ இலங்கையின் 55 ஆவது சுதந்திர தினத்தைக் கறுப்பு நாளாக வட - கிழக்கில் அனுஷ்டிப்பு.
05 ▸ ஜெனரல் சதீஸ் நம்பியார் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்.
06 ▸ அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் விசேட பிரதிநிதி யாழ். நிலை அறிய விஜயம்.
06 ▸ நாச்சிக்குடாவில் புலிகள் மீன்பிடிப் படகை கடற்படை சோதனையிட முயற்சித்தபோது, படகைத் தகர்த்து 3 கடற்புலிகள் வீரச்சாவு.
07 ▸ 5 ஆம் சுற்றுபேச்சு பேர்ளினில் ஆரம்பம்.
11 ▸ பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் றெனோ முசோலியர் யாழ். விஜயம்.
12 ▸ மானிப்பாயில் பெண் போராளிகள் மீது இராணுவத்தினர் தாக்குதல். பொது மக்கள் ஆர்ப்பாட்டம்.
13 ▸ யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் பதவி விலகினர்.



14 ▸ மானிப்பாய் சம்பவத்தைக் கண்டித்து யாழ். நகரில் பேரணி.
15 ▸ கிளாலியில் புலிகள் பகுதிக்குள் ஊடுருவிய 3 படையினரின் மீது புலிகள் தாக்குதல் - ஒருவர் பலி.
19 ▸ மானிப்பாய் சம்பவம் குறித்து விசாரிக்க இராணுவ அதிகாரிகள் குழு யாழ். வந்தது.
19 ▸ கந்தரோடையில் புதிய விகாரை அமைப்பதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்.
20 ▸ தமிழீழத் தேசிய விளையாட்டுவிழா கிளிநொச்சியில் ஆரம்பம்.
20 ▸ ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரமுகர்கள் கிளிநொச்சி விஜயம்.
21 ▸ ஜப்பான் வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் யாழ். வந்து நிலைமையை மதிப்பீடு.
23 ▸ நெடுந்தீவுக்கு அமைச்சர் மிலிந்த படை அதிகாரிகளுடன் திடீர் விஜயம்.
28 ▸ கேணல் கருணா - ஒஸ்டின் பெர்ணாண்டோ மட்டக்களப்பில் சந்தித்துப் பேச்சு.
28 ▸ வடக்கு-கிழக்கு புனரமைப்பு நிதியத்தை ஆரம்பிப்பது குறித்த ஒப்பந்தத்தில் சிறான் - உலகவங்கி கைச்சாத்து.

## மார்ச்

02 ▸ புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வருகை.
03. ▸ இலங்கை இந்திய மீனவர்களிடையே பேசாலையில் மோதல். 20 இந்திய மீனவர்கள் காயம், 16 படகுகள் தடுத்து வைப்பு. 105 இந்திய மீனவர்கள் பிடிக்கப்பட்டனர்.
05 ▸ கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹொவ்டே மற்றும் புதிய தலைவர் ரெலவ்சன் கிளிநொச்சியில் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சந்திப்பு.
05 ▸ பிரபாகரனின் பணிப்பின்பேரில் 2 படையினர் விடுவிப்பு.
07 ▸ அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வனுடன் கூட்டமைப்பு எம்பிக்கள் சந்திப்பு.
10 ▸ புலிகளின் வர்த்தகக் கப்பல் சர்வதேச கடற்பரப்பில்வைத்து கடற்படையினரால் மூழ்கடிப்பு. போராளிகள் வீரச்சாவு.
10 ▸ களுத்துறை கைதிகளுக்கு ஆதரவாக யாழ். செயலகம் முன் மறியல்.




11 ▸ தமிழீழ நீதிமன்ற வளாகம் கிளிநொச்சியில் திறந்துவைப்பு.
12 ▸ கிளிநொச்சியில் புலிகளுடன் கண்காணிப்புக்குழுவினர் சந்திப்பு.
13 ▸ நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் ரெலவ்சன் கிளிநொச்சியில் புலிகளுடன் சந்திப்பு.
16 ▸ ஆறாவது சுற்றுப்பேச்சுக்களில் பங்கேற்க புலிகள் குழு ஜப்பான் பயணம்.
17 ▸ 6 ஆவது சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பம்.
21 ▸ புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி மக்களை வாக்களிக்க விடாமல் தடுத்தது சட்டவிரோதமென தீர்ப்பளித்த உயர் நீதிமன்றம் இராணுவத்தளபதி பலகல்லவுக்கு அபராதம் விதிப்பு.
27 ▸ தமிழீழ தேசிய பெண்கள் மாநாடு மட்டக்களப்பில் ஆரம்பம்.
27 ▸ சமஷ்டி குறித்து ஆராய 16 பேர் கொண்ட புலிகளின் அரசியல் விவகாரக்குழு மேற்கு நாடுகளுக்குப் பயணம்.
31 ▸ விடுமுறையில் சென்ற படையினரை ஏற்றிக்கொண்டு யாழ். திரும்பிக்கொண்டிருந்த லங்கா முதித்த கப்பல் மீது திருமலைக் கடலில் தாக்குதல், 3 படையினர் காயம்.

## ஏப்ரல்


01 ▸ லங்கா முதித்த கப்பல் மீதான தாக்குதலுக்கும் தமக்கும் தொடர்பில்லை எனப் புலிகள் மறுப்பு.
03 ▸ மட்டு - திருமலையில் 55வது பயிற்சி முகாமில் பயிற்சிபெற்று 700 புலிகள் வெளியேறினர்.
04 ▸ ஜரிஷ் நோபல் பரிசாளர் ஜோன்ஹியூம் கிளிநொச்சியில் புலிகளுடன் சந்திப்பு.
07 ▸ ஜனாபதி சந்திரிகா சென்னையில் ஜெயலலிதாவுடன் பேச்சு.
07 ▸ கடற்பகுதி மோதல் தவிர்ப்பு குறித்து புலிகளுடன் ஹெல்கிசன் பேச்சு.
17 ▸ மூதூரில் தமிழ் - முஸ்லிம்களுக்கு இடையிலான மோதல்களில் நான்கு பேர் பலி. 20 பேர் காயம்.




18 ▸ கட்டைப்பறிச்சான் முகாமுக்கு வெளியே பொதுமக்கள்மீது படையினர் தாக்குதல். இரண்டு இளைஞர்கள் பலி. 17 பேர் காயம்.
19 ▸ திருமலை - ஜமாலியாவுக்கு வன்முறை பரவியது - மோதல்களில் 9பேர் காயம்.
20 ▸ வைத்திய கலாநிதி கெங்காதரனுக்கு தலைவர் பிரபாகரன் கௌரவம்.
21 ▸ அரசுடன் பேச்சுக்களை புலிகள் இடைநிறுத்துவதாகக்கடிதம்.
24 ▸ புலிகளின் அரசியல் விவகாரக்குழு கிளிநொச்சியிலிருந்து கொழும்பு பயணம். ஐரோப்பா செல்வதற்கு திட்டம்.
25 ▸ கண்காணிப்புக்குழுவை வெளியேற - கொழும்பில் ஜே. வி. பி ஆர்ப்பாட்டம்.
28 ▸ அனையிறவு வெற்றிப் பெருவிழா.

## மே

01 ▸ யாழ். நகரில் பிரமாண்டமான மேதின நிகழ்வு
03 ▸ கடல் மோதல் தவிர்ப்பு, பாதுகாப்பு வலயம் குறித்த புலிகள் - கண்காணிப்புக்குழுத் தலைவர் நீண்ட பேச்சு
05 ▸ அன்ரன் பாலசிங்கம் வன்னிக்குத் திரும்பினார். அடுத்த அரசியல் நகர்வுகுறித்து பிரபாவுடன் ஆராய்வு.
05 ▸ யாழ் கோட்டை முகாம் அமைப்பதற்கு எதிராக பொது அமைப்புக்கள் மறியற் போராட்டம்.
07 ▸ தலைவர் பிரபாவை ஐ. தே. கட்சி சந்திப்பு
08 ▸ நேர்வே தூக்குழு புலிகளின் பிரதிநி[illegible]களுடன் பேச்சு
11 ▸ குமார் பொன்னம்பலத்திற்கான மாமனிதர் விருதின் மூல ஆவணம் அவரது மனைவியிடம் தலைவர் பிரபா கையளித்தார்
11 ▸ திடீர் சுகயீனத்தால் அன்ரன் பாலசிங்கம் லண்டன் பயணம்.



13 ▸ கூட்டமைப்பு எம்பிக்கள் கிளிநொ[illegible] யில் புலிகளுடன் பேச்சு
15 ▸ நோர்வே வெளியுறவு அமைச்சர் [illegible] சன், விதார் ஹெல்கிசன் தலை[illegible] பிரபாவை வன்னியில் சந்திப்பு. இரக[illegible] மணிநேரம் பேச்சு நீடிப்பு.
15 ▸ அதிகாரக் கட்டமைப்பு எதுவும் இன்[illegible] ரோக்கியோ உதவிவழங்கும் மாநா[illegible]டிற்கு செல்வதில் பயனில்லை என[illegible] நோர்வேக் குழுவிடம் புலிகள் அறிவி[illegible]
17 ▸ சமாதான முயற்சி முட்டுக்கட்டைகளைக் களைய நோர்வே அமைச்சர் ஹெல்கிசன் புலிகளுடன் சந்திப்பு.
20 ▸ மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி வலி. வடக்கு மக்கள் யாழ். செயலகம் முன்பு மறியற்போர்.
23 ▸ புலிகளின் இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கையை ஜனாதிபதி சந்திரிக[illegible] நிராகரிப்பு
24 ▸ இடைக்கால நிர்வாகசபை குறி[illegible] சின் யோசனை புலிகளிடம் [illegible]
27 ▸ நவக்கிரியில், புதிய முகாம் [illegible] படுவதைக் கண்டித்து மக்கள் [illegible] போராட்டம்.
30 ▸ அரசின் புதிய யோசனை புலிக[illegible] நிராகரிப்பு, அன்ரன் பாலசிங்கம் கட[illegible] அனுப்பிவைப்பு

## ஜூன்

02 ▸ வல்வெட்டித்துறை புதிய படைமுகாம் அமைப்பதை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டம்.
06 ▸ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு ஆயிரக்கணக்கான மாணவர்கள் குடாநாட்டில் பேரணி.
09 ▸ இலங்கைச் சட்டங்களுக்கு முரணாகாத தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு ரோக்கியோ உதவி மாநாட்டில், பிரதமர் ரணில் அறிவிப்பு.



11 ▸ ரோக்கியோவில் அரசு முன்வைத்த யோசனையை புலிகள் நிராகரிப்பு.
14 ▸ சர்வதேசக் கடற்பரப்பில் புலிகளின் வணிகக் கப்பல் கடற்படையால் மூழ்கடிப்பு. 12 போராளிகள் வீரச்சாவு.
23 ▸ புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க பிரிட்டிஷ் பிரதமர் அரசிடம் வலியுறுத்து.

நல்லூர் இளை... மாநகராட்சி மன்றம்

# …மீள்பார்வை

…டி பாதுகாப்பு
… - கண்காணிப்
…ண்ட பேச்சு
…ன்னிக்குத் திரும்
… நகர்வுகுறித்து
… அமைப்பதற்கு
…புக்கள் மறியற்
…தே. கட்சி சந்
…ளின் பிரதிநி…
…ற்கான மாமனி
…ணம் அவரது
… பிரபா கைய
…ரன் பாலசிங்

- மீளப்போர் மூண்டால் 10 நாட்களில் யாழ்ப்பாணம் புலிகளின் கையில் விழும் என ஜனாதிபதி தெரிவிப்பு.
- யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு. … லட்சத்துக்கும் அதிகமானோர் பங்கேற்பு.
- கொழும்பில் பாரிய சுற்றிவளைப்பு - 650 தமிழர்கள் கைதாகி விசாரணை





…0 ▸ ஜப்பானிய தூதுவர் ஒட்சுகா கிளிநொச்சியில் புலிகளுடன் பேச்சு.

## ஜூலை

01 ▸ பிந்துனுவெவ படுகொலை வழக்கில் 5 எதிகளுக்கு மரணதண்டனை.
03 ▸ கனேடியத் தூதுவர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.
… கரும்புலிகள் நாள் நிகழ்வு உணர்வு …எழுச்சியுடன் அனுஷ்டிப்பு.
… …வில் நோர்வே தூதுவர் வெஸ் …புலிகளுடன் பேச்சு.
… கண்காணிப்புக்குழுவை வெளியேறுமாறு திருமலையில் சிங்களவர் ஆர்ப்பாட்டம்.
… நாதஸ்வர வித்துவான் என். கே. பத்மநாதன் காலமானார்.
… அரசின் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபு புலிகளிடம் ஒப்படைப்பு.
… யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற இருந்த நிகழ்வொன்றில் கலந்து கொள்ளவந்த அமைச்சர் ஜெயலத், …மாணவர்களால் திருப்பி அனுப்பப்பட்டார்.
… தமிழ்ச்செல்வன் கிழக்கு மாகாணத்துக்கு அரசியல் விவகாரப் பயணம்.

…கிளிநொச்…
…மைச்சர்…
…ன் தலை…
…ப்பு. இரக…
…
…துவும் இன்…
…கும் மாநா…
…ல்லை என்…
…ள் அறிவி…
…க்கட்டைக
… அமைச்சர்
… சந்திப்பு.
…கக் கோரி
… செயலகம்
…வாகசபைக்
…தி சந்திரிக…
… குறித்…
…புலிகளி…
…ங்கம் க…

## ஓகஸ்ட்

… அமைச்சர் ஜோன் அமர… விஜயம்.
… …ணய நிதியத்தின் பிரதிநிதி …செல்வனுடன் மூன்று மணிநேரம் …
… …டம் இடைக்கால நிர்வாகம் …யளிப்பதற்கெதிராக கொழும்பில் ஜே. வி. பி ஆர்ப்பாட்டம்.
13 ▸ சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்து கிளிநொச்சியில் சொல்ஹெய்ம் - தமிழ்ச்செல்வன் முக்கிய பேச்சு.
16 ▸ …சணி அமைச்சர் ராஜித சேனாரத்ன யாழ். விஜயம்.
19 ▸ இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு குறித்து ஆராயப் புலிகள் தரப்பு குழு பாரிஸ் பயணம்.
21 ▸ இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஆராயும் சட்டவல்லுநர்கள் மாநாடு பாரிஸில் ஆரம்பம்.
22 ▸ நோர்வேத் தூதுவர் பிரட்ஸ்கர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்.
25 ▸ …ங்குபாஞ்சான் முகாம் குறித்து கண்காணிப்புக்குழுத் தலைவர் சம்பூ… புலிகளுடன் பேச்சு.
… இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு …த்து புலிகளுடன் கலந்துரையாட சொல்ஹெய்ம் பாரிஸுக்குப் பயணம்.
26 ▸ இடைக்கால நிர்வாகசபைக்கு எதிரா… பிக்குகள் முன்னணி கண்டனக் …ட்டம்.
27 ▸ … - கிழக்கைப் பிரிக்குமாறு அம்பா…யில் கிழக்கைப் பாதுகாக்கும் …மைப்பு ஆர்ப்பாட்டம்.
28 ▸ …கிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகளை …க்க புலிகளின் உதவியை இந்தியா …வேண்டுமென பால் தக்கரே வேண்டுகோள்.

…படைமுகாம்
…க்கள் ஆர்ப்
… முன்னிட்டு
…ர்கள் குடா
…கு முரணா
… கட்டமைப்பு
…ட்டில், பிரத



…ன்வைத்த
…ராகரிப்பு.
… புலிகளின்
…டயால் மூழ்
…வீரச்சாவு.
…பிக்க பிரிட்
…லியுறுத்து.

28 ▸ வட - கிழக்கைப் பிரிக்கும்படிகோரியும், இடைக்கால நிர்வாகசபைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஜே. வி. பி நடத்திய நான்கு நாள் பேரணி கொழும்பில் நிறைவு.

## செப்ரெம்பர்


01 ▸ சுவிஸ் அமைச்சரவை அதிகாரிகளுடன் தமிழ்ச்செல்வன் - கருணா சந்திப்பு.
01 ▸ முப்படையினரின் ஆற்றலை அதிகரிப்பதுகுறித்து ஆராய, இந்திய இராணுவ அதிகாரிகள் குழு படைத்தளங்களுக்கு விஜயம்.
04 ▸ இடைக்கால நிர்வாக வரைபு, தலைவர் பிரபாவின் ஆலோசனையின் பின் அரசுக்கு அனுப்பப்படுமென வன்னி திரும்பிய தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு.
05 ▸ பொ. ஐ. முன்னணியுடன் கூட்டணி அமைக்கும் பேச்சுக்கள் முறிந்துவிட்டதாக ஜே. வி. பி அறிவிப்பு.
07 ▸ தமிழீழ காவல்துறை நடுவப்பணியகத்தை தலைவர் பிரபாகரன் திறந்து வைப்பு.
08 ▸ தமிழீழ வலைப்பந்தாட்ட அணியினரை கௌரவித்து தலைவர் பிரபா, பாராட்டுப் பத்திரங்களை வழங்கினார்.
10 ▸ தமிழ்ச்செல்வனை டென்மார்க் தூதுவர் சந்தித்துப்பேச்சு.
10 ▸ ரோக்கியோ மாநாட்டின் தொடர் கூட்டத்தில் பங்கேற்பதில்லை என்று புலிகள் முடிவு.
12 ▸ அரச - புலிகள் பேச்சைத் தொடங்கினாலேயே உறுதியளித்த நிதியினை வழங்கமுடியுமென கொழும்பு மாநாட்டில் அகாஷி தெரிவிப்பு.
15 ▸ ஜபானிய விசேட தூதுவர் அகாஷி கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனைச் சந்திப்பு.
17 ▸ இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராக கொழும்பில் பிக்குகள் முன்னணி சத்தியாக்கிரகம்.



19 ▸ கனேடியத்தூதுவர் கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.
20 ▸ பாதுகாப்பு நிலவரங்களை ஆராய சந்திரிகா உத்தரவின் பேரில் மகிந்த ராஜபக்ஷ திருமலைக்கு விஜயம்.
20 ▸ வவுனியாவில் பொங்கு தமிழ். 50 ஆயிரம் மக்கள் பங்கேற்பு.
29 ▸ உயர்பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம் உடனடியாகச் சாத்தியமில்லையென யாழ். தளபதி சரத்பொன்சேகா தெரிவிப்பு

## ஒக்ரோபர்

01 ▸ இடைக்கால நிர்வாகத் திட்டவரைபை உறுதிசெய்ய தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின்குழு அயர்லாந்துக்குப் பயணம்.
03 ▸ இராணுவ வாகனம் மோதி யாழ். நகரில் இருவர் பலி. தொடர்ந்து மக்கள் கிளர்ச்சி. கண்ணீர்ப்புகை, துப்பாக்கிச் சூடு, பதற்றம்.
04 ▸ படையினரின்செயலைக் கண்டித்து மக்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டம். ஆங்காங்கே மோதல்கள்.
09 ▸ புலிகளின் திட்டவரைபை உறுதிசெய்ய இறுதிக்கலந்துரையாடல் டப்ளினில் ஆரம்பம்.
09 ▸ கிண்ணியாவில் தமிழ் - முஸ்லிம் கலவரம். 10 பேர் காயம்.
10 ▸ இடைக்கால நிர்வாகத் இறுதித்திட்ட வரைபு தயாரிக்கும் டப்ளின் கலந்துரையாடல் நிறைவு.
11 ▸ இராணுவ வாகனமொன்று, அரியாலையில் ஓட்டோமீது மோதியது. தொடர்ந்து பொதுமக்கள் படையினர் மீது தாக்குதல். 5 பேர் காயம்.
14 ▸ டென்மார்க் அரச அதிகாரிகளுடன் தமிழ்ச்செல்வன் குழுவினர் நீண்ட பேச்சு.
15 ▸ மன்னாரில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு. 30 ஆயிரம் பேர் பங்கேற்பு.
16 ▸ கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில் கிரஹம் யாழ். விஜயம்.
21 ▸ பின்லாந்து தூதுவர் வன்னிக்குச் சென்று தமிழ்ச்செல்வனுடன் பேச்சு.
22 ▸ பருத்தித்துறையில் மீனவர் ஒருவர் தாக்கப்பட்டதையடுத்து, அங்கு திரண்ட மக்கள்மீது படையினர் தாக்குதல் - 20 பேர் காயம்.
23 ▸ கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சனைப் பதவிநீக்குமாறுகோரி சந்திரிகா நோர்வேப் பிரதமருக்கு அவசர கடிதம்.




24 ▸ சமாதான முயற்சிக்கு எதிராகக் கொழும்பில், சுதந்திரக் கட்சி பேரணியில் 60 ஆயிரம் பேர் பங்கேற்பு.
25 ▸ மீனவர் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பருத்தித்துறையில் மீனவர் போராட்டம்.
27 ▸ கூட்டுப்படைகளின் தளபதியாக லெப். ஜெனரல் லயனல் பலகல்ல பொறுப்பேற்பு.
29 ▸ கொழும்பு சிங்கள - தமிழ் கலைக் கூடலில் சிஹல உறுமய குண்டர்கள் தாக்குதல். பத்திரிகையாளர்கள் உட்பட பலருக்குக் காயம்.
29 ▸ கண்காணிப்புக்குழுத் தலைவர் நோர்வே பயணம்.
31 ▸ புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபு நோர்வே தூதரிடம் புலிகள் கையளிப்பு.

## நவம்பர்

01 ▸ தன்னாட்சிக்கான இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபை புலிகள் வெளியீடு.
04 ▸ பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை அமைச்சுக்களை - ஜனாதிபதி சந்திரிகா பறிப்பு.
05 ▸ அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்த ஜனாதிபதி உத்தரவு.
05 ▸ பிரதமர் ரணில் மீது நம்பிக்கை தெரிவித்து 175 எம். பிக்கள் கையெழுத்திட்டு சபாநாயகரிடம் கையளிப்பு.
09 ▸ பாதுகாப்பு, ஊடகத்துறை அமைச்சுக்கள் தம்மிடம் இல்லாததால், புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை ஜனாதிபதியிடம் கையளிக்க அரசாங்கம் முடிவு.
10 ▸ தேர்தலை எதிர்கொள்ளத் தயாரென ஐ. தே. மு. அரசு தீர்மானம்.




12 ▸ அரசியல்நெருக்கடி, சமாதானமுயற்சி குறித்து நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், சொல்ஹெய்ம் குழுவினர் ஜனாதிபதியுடன் சந்திப்பு.
12 ▸ அரசியல்நெருக்கடி குறித்து பிரதமர் ரணில் - சந்திரிகா 3 மணிநேரம் பேச்சு.
13 ▸ நாரந்தனை கூட்டமைப்புத் தாக்குதல் வழக்கு மேல் நீதிமன்றத்துக்கு மாற்றம்.



13 ▸ யுத்தநிறுத்த உடன்பாடு தொடர்வதை நோர்வே உறுதிசெய்யவேண்டுமென தலைவர் பிரபாகரன் - நோர்வே பிரதி அமைச்சர் ஹெல்கிசனிடம் நேரில் வலியுறுத்து.
14 ▸ அரசியல்நெருக்கடி தீரும்வரை சமாதான முயற்சிகளை இடைநிறுத்துவதாக நோர்வே அறிவிப்பு. சமாதான முயற்சிகளிலிருந்து விலகுவதாகப் பிரதமர் ரணிலும் அறிவிப்பு.
15 ▸ சமாதான முயற்சி இடைநிறுத்தம், அமெரிக்கா கவலை தெரிவிப்பு.
18 ▸ அரசியல் இணக்கப்பாடு உருவாக்கும் ஜனாதிபதி - பிரதமர் சந்திப்புத் தோல்வி.
18 ▸ இருவார ஒத்திவைப்பின் பின் நாடாளுமன்றம் கூடியது.
19 ▸ ஐ. தே. மு அரசின் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிப்பு.
20 ▸ யாழ். இராணுவத்தளபதியாக மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க நியமனம்.
23 ▸ நாட்டை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதாகச் சந்திரிகாமீது ஐரோப்பிய நாடாளுமன்றம் எச்சரிக்கை.
25 ▸ மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகள் ஆரம்பம்.
26 ▸ ஐரோப்பிய நாடாளுமன்ற வெளிவிவகார அமைச்சர் கிறிஸ் பற்றன் - தலைவர் பிரபாகரனுடன் சந்திப்பு.
26 ▸ பயிற்சியில் ஈடுபட்டிருந்தவேளை, 10 படையினர் சேற்றில் மூழ்கி மரணம்.
27 ▸ மாவீரர் நாள் நிகழ்வுகள்.
28 ▸ வயல் காவலுக்குச் சென்ற 3 முஸ்லிம்கள் வெட்டிக்கொலை. தொடர்ந்து கிண்ணியாவில் பதற்றம்.


## டிசம்பர்

01 ▸ புலித்தேவன் தலைமையிலான புலிகளின்குழு தென்னாபிரிக்காவில், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்களுடன் சந்திப்பு.



02 ▸ இராணுவக்கட்டளை அமைப்பில் மாற்றம். யாழ். தளபதியாக மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால நியமிப்பு.
08 ▸ கூட்டமைப்பு எம். பிக்கள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.
09 ▸ யாழ். பஸ் நிலையத்தில் படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இருவர் காயம்.
11 ▸ பஸ் நிலைய தாக்குதலைக் கண்டித்து குடாநாட்டில் பூரண ஹர்த்தால்.
12 ▸ வவுனியாவில் மூன்று பொதுமக்களை கொலைசெய்த படையினருக்கு நீதிமன்றம் மரணதண்டனை.
17 ▸ யாழ். படைத்தளபதியாக சுசில் சந்திரபால பதவியேற்பு.
18 ▸ 28 ஆவது பொலிஸ் மா அதிபராக இந்திரா டீ சில்வா நியமனம்.
19 ▸ உள்துறை அமைச்சிடம் இருந்த 7 திணைக்களங்கள் பாதுகாப்பு அமைச்சின் வசம் ஒப்படைப்பு
22 ▸ புதிய ஜப்பானியத்தூதுவர் தமிழ்ச்செல்வனைச் சந்திப்பு
29 ▸ குடாநாட்டில் காணாமற்போனோரின் உறவினர்கள் நீதியமைச்சின் முன் மறியல்.

# 2003 - உலகம் ஒரு மீள்பார்வை



சதாம் : ஆட்டம் முடிந்தது.

## ஜனவரி

**ஜனவரி-1**

நாற்பது வருடங்களுக்குப் பின்னர் பிறேசிலில் வலதுசாரி கட்சியைச் சேர்ந்த லூயிஸ் இனாசியா லூலாடா சில்வா ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

**ஜனவரி-10**

அணுஆயுதம் உற்பத்தி செய்வதை நிறுத்துவதாக வட கொரியா அறிவித்தது. இந்த அணுமூலம் மின்சாரத்தை மட்டுமே உற்பத்தி செய்யவுள்ளதாகவும் அது அறிவித்தது.

**ஜனவரி-12**

பிரபல டிஸ்கோபாடகர் மயூறைஸ் கிப் சத்திரசிகிச்சையின் போது மரணமானார்.

**ஜனவரி-30**

பாரிஸிலிருந்து அமெரிக்காவுக்கு சென்ற விமானத்தை சப்பாத்திற்குள் குண்டுவைத்து தகர்க்கும் முயற்சியில் ஈடு பட்டதாக கைது செய்யப்பட்ட றிச்சாட் றெயிட்டிற்கு பிரிட்டிஷ் நீதிமன்றமொன்று ஆயுட்காலத் தண்டனை வழங்கியது.

## பெப்ரவரி

**பெப்ரவரி-1**

விண்ணிலிருந்து பூமிக்கு திரும்பிக்கொண்டிருந்தவேளை கொலம்பிய விண்கலம் வெடித்துச் சிதறி 6 அமெரிக்கர்களும் ஒரு இஸ்ரேலியரும் கொல்லப்பட்டனர்.

**பெப்ரவரி-3**

ஈராக் வைத்திருக்கும் பேரழிவு தொடர்பான ஆயுதப் பட்டியல் விபரங்களை பிரிட்டிஷ் அரசு வெளியிட்டது.

**பெப்ரவரி-6**

ஈராக்கிடமுள்ள பேரழிவு ஆயுதங்கள் தொடர்பான சான்றுகள் தம்மிடம் உள்ளதாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் தெரிவித்தார்.

**பெப்ரவரி-14**

குளோனிங்மூலம் முதன்முறையாக உருவாக்கப்பட்ட செம் மறி ஆடு சுவாசப்பையில் ஏற்பட்ட நோய் காரணமாக இறந்தது.

**பெப்ரவரி-15**

ஈராக்மீது போர் தொடுக்கக்கூடாதெனப் பெருமளவான பிரிட்டன் மக்கள் லண்டன் நகரில் தமது எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

**பெப்ரவரி-24**

ஐ.நாவின் 1441 வது, விதியின்படி ஈராக்கிலுள்ள பேரழிவு ஆயுதங்களைப் பார்வையிட அனுமதிக்குமாறு அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் ஈராக்கை கேட்ட போதும் அதனை ஈராக் மறுத்துவிட்டது.

## மார்ச்

**மார்ச்-1**

பின்லேடனின் முக்கிய உதவியாளரான காலித் ஷேக் மொகமட் பாகிஸ்தானில் வைத்து அந்நாட்டுப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

**மார்ச்-12**

சேர்பியன் பிரதமர் சோரான் டிகின் டிஜிக் படுகொலை செய்யப்பட்டார்.

**மார்ச்-17**

ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படை கள் தாக்குதல் நடத்த உள்ளதால் 48 மணிநேரத்தில்



ஸ்வாஸேனகர் : இன்னொரு நீதகன்

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனை நாட்டைவிட்டு வெளியே றுமாறு அதிபர் புஷ் தொலைக்காட்சியில் தோன்றி அறிவித்தார்.

**மார்ச்-18**

பிரிட்டன் நாடாளுமன்றில் 412 எம்.பிக்கள் ஈராக்கில் பிரிட்டன் போரில் ஈடுபடுவதற்கு பிரதமர் ரொனி பிளேயருக்கு ஆதரவுதெரிவித்தனர்.

**மார்ச்-19**

பலஸ்தீன பிரதமராக முகமட் அப்பாஸை ஜனாதிபதி யசீர் அரபாத்தார் நியமிக்கப்பட்டார்.

**மார்ச்-20**

ஈராக்மீது அமெரிக்க கூட்டணிப் படைகளால் அதிகாலை வேளை போர் தொடக்கப்பட்டது. முதலில் ஈராக் தலைநகர் பாக்தாத் மீது அமெரிக்க கூட்டணிப்படைகளின் விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தின.

**மார்ச்-24**

பியானிஸ்ட் என்ற திரைப்படத்திற்காக றோமன் பொலான்ஸ்கி ஒஸ்கார் விருதினைப் பெற்றார்.

## ஏப்ரல்

**ஏப்ரல்-1**

ஈராக் இராணுவத்தால் பிடிக்கப்பட்ட அமெரிக்க பெண் சிப்பாய் மீட்பு.

**ஏப்ரல்-2**

சீனா, கொங்கொங் நாடுகளில் சார்ஸ் நோய் காணப்ப டுவதனால், அந்நாடுகளில் பயணங்களை மேற்கொள்ள வேண்டாமென உலக சுகாதார நிறுவனம் பிரயாணிகளுக்கு எச்சரிக்கை விடுத்தது.

**ஏப்ரல்-7**

அமெரிக்கப்படைகளால் நடத்தப்பட்ட கடும் தாக்குதலின் பின்னர் அவர்கள் ஈராக் தலை நகர் பாக்தாத்திற்குள் நுழைந்தனர்.

**ஏப்ரல்-9**

பாக்தாத் மீதான தனது கட்டுப்பாட்டினை ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் இழந்தார்.

## மே

**மே-12**

ஈராக் மீதான போரை எதிர்த்து கிளேயர் சொட் தனது சர்வதேச அபிவிருத்தி செயலாளர் பதவியிலிருந்து இராஜி னாமாச் செய்தார்.

**மே-15**

ஆர்ஜன்ரீனாவில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சியிலி ருந்த ஜனாதிபதி கார்லோஸ் மேனெம் விலக எதிர்க்கட்சியைச்



கொன்கோட் : இறுதிப் பயணம்

சேர்ந்த நெஸ்ரர் இர்ச்னர் ஜனாதிபதியாக பொறுப்பேற்றார்.

**மே-17**

ஸ்பானிய விடுதியொன்றில் இடம்பெற்ற ஐந்து தற்கொலைத் தாக்குதல்களில் 29 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

**மே-18**

இந்தோனேஷியாவின் ஆகாஷ் மாநிலம் தொடர்பாக பிரிவினைவாதிகளுடன் இந்தோனேஷிய அரசு மேற்கொண்ட பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது.

**மே-29**

பிரிட்டிஷ் அரசால் ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப் பதாகச் சொல்லப்படுவது தனக்கு சந்தேகத்தை ஏற்படுத் துவதாக பிரிட்டன் பத்திரிகையாளரான அன்றூ இலிகன் தெரி வித்தார்.

## ஜூன்

**ஜூன்-4**

பலஸ்தீனம், இஸ்ரேல் நாடுகள் அமெரிக்காவினால் முன் வைக்கப்பட்ட சமாதானத்துக்கான பாதை வரைபினை ஏற் றுக்கொண்டன.

**ஜூன்-11**

பிரிட்டிஷ் மகாராணி மார்க்கிரட் தட்சரின் கணவர் தனது 88 ஆவது, வயதில் காலமானார்.

## ஜூலை

**ஜூலை-8**

ஈரானில் தலை ஒட்டிப்பிறந்த லாடா, லேனி இரு சகோதரி களையும் வெவ்வேறாகப் பிரிக்கும் சத்திரசிச்சையின்போது துயரமான முறையில் மரணமானார்கள்.

**ஜூலை-18**

ஈராக் தொடர்பான ஆயுத விபரங்களைத் தெரிந்து வைத்திருந்த பிரிட்டனைச் சேர்ந்த டேவிட் கெலி இறந்த நிலையில் மீட்கப்பட்டார்.

**ஜூலை-22**

பாக்தாத்தில் சதாம் ஹுசைனின் மகன்களான உதேய் மற்றும் குசேய் அமெரிக்கப்படைகளால் சுட்டுக்கொல்லப்பட் டனர்.

## ஓகஸ்ட்

**ஓகஸ்ட்-1**

டேவிட் கெலியின் மரணம் தொடர்பாக நீதிபதி லோட் கட்டன் தலைமையில் விசாரணைக் குழுவொன்றை பிரதமர் ரொனி பிளேயர் நியமித்தார்.

**ஓகஸ்ட்-4**

அமெரிக்க அங்கிலிகன் சபை ஓரினச்சேர்க்கையை அங் கீகரித்தது.

**ஓகஸ்ட்-7**

இந்தோனேஷிய பாலி குண்டு வெடிப்பில் சூத்திரதாரியான அம்றோசிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

**ஓகஸ்ட்-10**

பிரிட்டனில், அதிகூடிய வெப்பநிலை 38.1 டிகிரி காட்டப்பட் டது.

**ஓகஸ்ட்-11**

லைபீரிய ஜனாதிபதி சார்ள்ஸ் ரெய்லர் பதவி விலகி நைஜீரிய நாட்டில் அரசியல் தஞ்சம் கோரினார்.

**ஓகஸ்ட்-16**

சவுதி அரேபியாவில் அரசியல் தஞ்சமடைந்திருந்த உகண்டா நாட்டு ஜனாதிபதி இடிஅமீன் உயிரிழந்தார்.

**ஓகஸ்ட்-19**

பாக்தாத்தில் நடந்த தாக்குதலில் ஐ.நா பிரதிநிதி சேஜியோவிர யாடிமெலோ உட்பட 23 பேர் கொல்லப்பட்டனர்.

**ஓகஸ்ட்-25**

இந்தியாவின் மும்பாய் நகரில் நடந்த கார்க் குண்டு வெடிப்பில் 52 பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு [illegible]0 பேர் படுகாயமடைந்தனர். இதன்பின் பல முஸ்லிம் சந்தேக நபகள் கைதுசெய்யப்பட்டனர்.

## செப்ரெம்பர்

**செப்டெம்பர்-11**

சுவீடனின் வெளியுறவு அமைச்சர் அனாலின்டா, கடை களில் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தவேளை இனம் தெரியதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

**செப்டெம்பர்-12**

கிராமியப் பாடல்களைப்பாடி புகழ்பெற்ற ஜோனி காஷ் நீரிழிவு நோயினால் தனது 71 ஆவது வயதில் உயிரிழந்தார்.

## ஒக்ரோபர்

**ஒக்டோர்-8**

ஹொலிவூட் நடிகரான அனோல்ட் ஸ்வாஸ்னகர் கலி போர்னிய மாநில கவர்னராக தேர்தல்மூலம் தெரிவுசெய்யப் பட்டார்.

**ஒக்டோப-19, 24**

கொன்கோட் தனது இறுதிப் பயணத்தை நடத்தியது.

**ஒக்டோபர்31**

22 வருட ஆட்சியின் பின் மலேசியப் பிரதமர் மகதீர் முகமட் தனது பதவியை துணைப்பிரதமரிடம் கையளித்து அரசிய லிலிருந்து விலகினார்.

## நவம்பர்

**நவம்பர்-17**

சினைப்பர் தக்குதல் மூலம் 10 பேரை கொன்றதாகக் கூறி, ஜோன் அலர்மொகமட் என்பவருக்கு தூக்குத் தண் டனை விதிக்கப்படடது.

**நவம்பர்-20**

துருக்கியின் தலைநகரான இஸ்தான்புல்லில் அமைந் துள்ள பிரிட்டன் வங்கிக்கு முன்னால் நடத்தப்பட்ட இரு தற்கொலைத் தாக்குதல்களில் 25 பொதுமக்கள் கொல்லப் பட்டு 400 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

**நவம்பர்-23**

ரக்பி விளையாட்டில் அவுஸ்ரேலியாவை இங்கிலாந்து தோற்கடித்தது.

## டிசம்பர்

**டிசம்பர்-14**

ஈராக்கில் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் திக்ரீட் நகரில் வைத்து அமெரிக்கப் படைகளால் கைதுசெய்யப்பட் டார்.



ஈரான் : இப்பவும் ஒரு அழிவு

**டிசம்பர்-19**

பேரழிவைத்தரக்கூடிய ஆயுதங்களை தனது நாட்டிலி ருந்து அகற்றுவதற்கும், அதனை சர்வதேசக் கண்காணிப் பாளர்கள் பார்வையிடவும் அனுமதிப்பதாக லிபிய அதிபர் கேணல் கடாபி தெரிவித்தார்.

**டிசம்பர்-22**

கொலம்பிய தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு பயணக்கை திகளாக இருந்த எட்டு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிக ளும் விடுதலை செய்யப்பட்டனர்.

**டிசம்பர்-25**

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷராப் மீது நடத் தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் இருந்து அவர் மயிரிழை யில் தப்பினார்.

**டிசம்பர்-26**

ஈரானின் பாம் நகரத்தில் இடம்பெற்ற பூமியதிர்ச்சியில் 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலி.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

கடிந்த கடிந்துஓரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பிழை தரும்.

-திருக்குறள்.

## நமது நோக்கு

# கடந்த ஆண்டும், புதிய ஆண்டும்...

ஏகப்பட்ட எதிர்பார்ப்புக்களையும், எதிர்காலம் குறித்த நம்பிக்கைகளையும், ஏற்படுத்தியவண்ணம் மலர்ந்து ஏமாற்றங்களையும், அவநம்பிக்கைகளையும் மட்டுமே தந்துவிட்டு - 2003 ஆம் ஆண்டு நேற்றுடன் தனது கால வரலாற்று அத்தியாயத்தை முடித்துக் கொண்டது.

இன்று மற்றொரு புதிய ஆண்டு உறுதியற்ற நம்பிக்கையுடனும், துலக்கமற்ற எதிர்காலம் குறித்த எண்ணங்களுடனும், சமாதானம் - அமைதி குறித்த சந்தேகங்களுடனும் தனது வரலாற்று வரிகளை எழுத ஆரம்பிக்கிறது.

இந்த நிலையில், கடந்த ஆண்டு எமது மக்களின் மனதில் பதித்துவிட்டுப்போன நிகழ்வுகளை ஒருதடவை மீள்பார்வை செய்தால் - நாம் எங்கு நிற்கிறோம், இனி நாம் என்ன செய்யப்போகிறோம், பிறந்துள்ள புத்தாண்டு எமக்கு எதை வழங்கக் காத்திருக்கிறது என்பது குறித்த திப்பீடொன்றை வழங்கக்கூடும்.

உதிர்ந்த ஆண்டு உயிர்த்த நாளில் எமது மக்களின் ...ாண்டு எதிர்பார்ப்புக்கள் அபரிமிதமாகவே இருந்தது. ...மாதான நகர்வுகள் முன்னேற்றப்பாதையில் வேகம் ...ள்ளும், வாழ்க்கை புனர்ஜென்மம் எடுக்கும், சொந்த ...ணில், சொந்தக் காணியில் கொட்டில் போட்டுக் ...ண்டாயினும் குடிபோகலாம், தோட்டமோ, வயலோ ...து கௌரவமாக வாழலாம், எங்கள் கடலில் ...ீனமாகத் தொழில் செய்து பிழைப்பு நடத்தலாம், ...டியமர்வுக்கான நிதி கிடைக்கும், எமது பிள்ளை... எதிர்காலத்தை வளம் படுத்தலாம் என எத்த...யா கனவுகளுடன் 2003 ஆம் ஆண்டை எதிர்...ண்டவர்கள் எமது மக்கள்.

...ந்தக் கனவுகள் எதுவுமே நிஜமாகவில்லை. அவர்... புதுவாழ்வுக்கு இராணுவ உயர்பாதுகாப்பு வலயம் [illegible]க்கவில்லை. கடல் வலயம் விட்டுக்கொடுக்கவில்லை.

...னர்வாழ்வும், புனரமைப்பும் வெறும் திட்டங்களாகவே கோப்புகளின் ஆவணங்களில் கட்டப்பட்டு விட்டன. தமிழ் மக்களின் இயல்புவாழ்வுமீள, பேரினவாதம் அனுமதிக்கவில்லை. ஆட்சித்தலைமைகளிடையேயான அதிகாரப்போட்டியில் சமாதான முயற்சிகள் மூச்சிழந்துபோயிற்று.

சமாதானத்தின் பேராலும் எமது மக்களே சுரண்டப்பட்டார்கள், ஏமாற்றப்பட்டார்கள்.

எம்மைச்சுற்றிய முட்கம்பிவேலிகள் மீண்டும் புதிப்பிக்கப்பட்டனவேயன்றி அகற்றப்படவில்லை.

நாங்கள் எங்கள் வீட்டுக்குப்போக நீங்கள் உங்கள் வீட்டுக்குப்போங்கள் என சற்று உரக்கவே... கௌரவமாகவே குரல் எழுப்பினோம்.

அது அதிகார வர்க்கத்தின் செவிக்குள் ஏறவேயில்லை.

காவலரண்களுள் பதுங்கி நின்று பார்க்கும் படையின...் பார்வையில் - சமாதானத்தின் கருணை தென்...டுவதாக இல்லை. அவர்கள் குறிவைத்தபடி நீட்டி நிற்கும் துப்பாக்கியின் வன்மம் குறைவதாகவே இல்லை.

- ஆனாலும் சமாதானத்திற்கு வயது இரண்டாகிவிட்டது.

இந்தநிலையில் ஏக்கமும், ஏமாற்றமும் நிறைந்த விழிகளுடன் கடந்துபோகும் ஆண்டுக்கு விடை கொடுத்துவிட்டு, வருகைதரும் புத்தாண்டை அதே பார்வையால் வரவேற்கும் எம் மக்களின் எதிர்பார்ப்பு இந்த ஆண்டுக்கும் புரியும் - ஆண்டுக்குப் புரிந்தென்ன? ஆள்பவர்களுக்குப் புரியவேண்டுமே!

இது எங்கள் நோக்கே கடந்த ஆண்டென்றால்... உலகின் ஏனைய மக்களின் பார்வையில்...

வல்லாதிக்க சக்திகளின் மேலாதிக்க சிந்தனை எல்லையற்றதாகி, பலவீனமான சக்திகளைப் பலி கொள்ளும் நடவடிக்கை கடந்த ஆண்டிலும் தொடரவே செய்தன.

- இஸ்ரேல் அடங்கவில்லை.
- பா...ஸ்தீனம் விடியவில்லை.
- ஈரா... அழிந்துபோயிற்று.
- ஆப்கான் உயிர்க்கவில்லை.

உலகெங்கும் ஆதிக்க சக்திகளால் அடக்கப்படுவோரின் நெடுமூச்சு குறைவதாக இல்லை.

ஆயுதங்களை உற்பத்திசெய்து, களஞ்சியப்படுத்திக் கொண்டே சமாதானத்தை வலியுறுத்துவோர் - ஒடுக்கப்படுவோரின் உரிமையுடன் விளையாடுபவர்களாகவே உள்ளனர்.

பூமிக்கே பொறுக்கவில்லை. அதிர்ச்சி தாங்காது சிலிர்த்ததில் ஈரான் உதிர்ந்துபோயிற்று. இடிபாடுகளுள் சிக்குண்ட அந்த மக்களின் மரண ஓலத்துடன், கடந்த ஆண்டும் மரணித்துப்போயிற்று.


இன்று பிறக்கும் புதிய ஆண்டு - தமிழ்மக்களுக்கும், உலக மக்களுக்கும் எந்தவகையிலான நம்பிக்கையைக் கொடுக்கப்போகிறது... அல்லது எந்தவிதமான அதிர்ச்சியை அல்லது ஏமாற்றத்தைக் கொடுக்கப்போகிறது?

- புத்தாண்டினுள் புதைந்துள்ள இரகசியமே இதுதான்.

- எனினும் இந்த ஆண்டையும் நம்பிக்கையுடன் எதிர்கொள்வோம்!

- நம்பிக்கை மட்டும்தான் மனிதனின் மூலபலம், மூலவளம்.

## நாடும் நடப்பும்




# புலம் பெயர்ந்த இலங்கை ஊழியர்களால் 6 மாதத்தில் 79.433 பில்லியன் ரூபா வருமானம்

மத்திய கிழக்கு நாடுகளை முதன்மையாகக் கொண்டு உலகம் முழுவதும் சேவையாற்றும் இலங்கையின் புலம் பெயர்ந்த ஊழியர்களினால் இந்த ஆண்டு ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் கிடைக்கப்பெற்றுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு வருமானம் 79. 433 பில்லியன் ரூபா என்று தொழில் வேலைவாய்ப்பு அமைச்சு மதிப்பிட்டுள்ளது. கடந்த வருட காலப்பகுதியை விட இது 15.6 சதவீத வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த ஆண்டு 2 லட்சத்து 17 ஆயிரம் இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக புலம் பெயர்ந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. மத்திய கிழக்கு நாடுகள் உட்பட உலகம் முழுவதும் ஆகக்குறைந்தது 1.2 மில்லியன் இலங் கையர்கள் தொழில் புரிந்து வருகின்றனர். இவர்களில் 90 சதவீதமானோர் மத்தியகிழக்கு நாடுகளில் பணிபுரிவதோடு 65 சதவீதமானனோர் பெண் ஊழியர்களாவர்.

இதன்படி கடந்த 2002 ஆம் ஆண்டு இவர்கள் இலங்கைக்கு அனுப்பிய வெளிநாட்டு உழைப்பு 123.183 பில்லியன் ரூபாய்கள் எனவும் அமைச்சினால் மதிப்பிடப்பட்டுள்ளது. வீட்டுப் பணிப்பெண்களுக்குப் பதிலாக பயிற்சி பெற்ற ஊழியர்களை அதிகளவில் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு மத்திய கிழக்கு நாடுகளுக்கு புறம்பான தொழில் சந்தையினை விஸ்தரிப்பு செய்யும் நோக்கத்துடன், ஜோர்தான், சைப்பிரஸ், லெபனான் மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திடவுள்ளதாக அமைச்சு தெரிவிக்கின்றது.

# தவசிக்குளத்தில் கூட்டுறவுக்கடை இயங்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

கொடிகாமம் பலநோக்கு கூட்டுறவு சங்க தவசிக்குளத்திலுள்ள கிளை - கடந்த சில மாதங்களாகக் கொடிகாமத்தில் இயங்குவதால், அங்குள்ள மக்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தவசிக்குளத்திலுள்ள மக்கள் தமது நிவாரணங்களைப் பெறுவதற்கு - பல மைல் தூரம் சென்றே பெறவேண்டியுள்ளது. தவசிக்குளப் பகுதியிலுள்ள நூற்றுக்கணக்கான மக்கள் இவ்வாறு அலைந்து திரியவேண்டியுள்ளது.

இதேவேளை, அன்றாடம் தேவையான பொருட்களை வழங்குவதிலும் இந்தக் கிளையே அந்தப் பகுதியில் பெரும்பங்கு வகித்து வந்துள்ளது. எனவே, இதனை உரிய இடத்தில் இயக்க நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபர் செ.பத்மநாதனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (25)

# திரைப்படக் கூட்டுத்தாபன திரைக்கலைக் கண்காட்சி

சிங்கள சினிமாவின் 52 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள திரைக்கலைக் கண்காட்சி, கொழும்பு "ஜோன் டி சில்வா" மண்டபத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில், இலங்கைத் தமிழ் சினிமா சம்பந்தமான அரங்கை நிர்மாணிக்கும் பொறுப்பைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் விருப்பத்தின் பேரில் "சலன சித்திரம்" ஏற்றுள்ளது.

இந்தக் கண்காட்சியைத் திறம்பட நடத்துவதற்கு இலங்கைத் தமிழ்த் திரைப்படம் சம்பந்தமான புகைப்படங்கள், ஆக்கங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், விருதுகள், துண்டுப்பிரசுரங்கள், பாட்டுப்புத்தகங்கள், சுவரொட்டிகள் போன்றவற்றை வைத்திருப்பவர்கள் தந்துதவவிரும்பின், அது பற்றி நேரடியாகவோ அல்லது தபால்மூலமோ 'சலன சித்திரம்' கொடிகாமம் வீதி, கரவெட்டி எனும் முகவரியுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருகின்றனர்.

# நடமாடும் சேவையொன்றை சாவகச்சேரியில் நடத்தவும்

## வணிகர் மன்றம் அரச அதிபரிடம் கோரிக்கை

தென்மராட்சிப் பிரதேச மக்களின் நன்மைகருதி, நடமாடும் சேவையொன்றைச் சாவகச்சேரியில் நடாத்தும்படி சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கையொன்றை விடுத்துள்ளது.

இந்தவிடயம் தொடர்பாக இந்த மன்றத்தின் தலைவர் பி.என்.சற்குணராசா - அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றை கையளித்துள்ளார்.

இந்த மகஜரில் மேலும் தெரிவித்ததாவது -

தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தத்தினைத் தொடர்ந்து இடம்பெற்ற இடப்பெயர்வின்போது, ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமது முக்கியமான ஆவணங்களை இழந்தநிலையில் இருப்பதால், அவற்றை மீள வழங்க உதவும் பொருட்டு ஒரு நடமாடும் சேவையினை சாவகச்சேரியில் நடாத்தி உதவ வேண்டும்.

யுத்தத்தின் காரணமாகத் தென்மராட்சியில் இருக்கின்ற குடும்பங்கள் - தமது காணி உறுதிகள், வியாபாரச் சான்றிதழ்கள், இறப்புப் பிறப்புச் சான்றிதழ்கள், திருமணச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டைகள் மற்றும் வங்கிகளினால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட நிலையான வைப்புகளுக்குகான சான்றிதழ்கள் போன்றவை அழிந்தும் தொலைந்தும் போய்விட்டன.

இந்த முக்கிய ஆவணங்கள் இல்லாமையினால், பொது மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். எனவே, மேற்குறிப்பிடப்பட்ட ஆவணங்களை மீளவும் வழங்குவதற்கான இயலக்கூடிய ஏற்பாடுகளைச் செய்துதரும்படி கோருகின்றோம்.

மேலும், சாவகச்சேரி நகரத்தில் - சாவகச்சேரி நகரசபையினால் திட்டமிடல் இல்லாமல் செய்யப்படும் தற்காலிக வேலைத்திட்டங்கள் யாவும் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

எமது மக்கள் போரினால் அழிக்கப்பட்டு அடிக்கட்டுமானத்தையே இழந்துநிற்கும் நிலையில் திட்டமிடல் இல்லாத வேலைத்திட்டத்தினால் பாதிப்பை ஏற்படுத்துவது தடுத்து நிறுத்தப்படவேண்டும். எமது பிரதேச மீள்குடியேற்றம் நடந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்துள்ளபோதிலும்கூட, சாவகச்சேரி நகர அபிவிருத்திக்கான வரைபடம் இதுவரை தயாரிக்கப்படாமல் இருப்பது வேதனைக்குரியதாகும்.

அத்துடன், யுத்தத்தின் காரணமாக அடிக்கட்டுமானங்களை இழந்தநிலையில் இருக்கும் வர்த்தக நிறுவனங்கள், சிறுகைத்தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு நீண்டகால அடிப்படைத்திட்டத்தில் கடன் வழங்கவும், நஷ்டஈடு பெற்றுக்கொடுக்குமாறும் அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2004 ஆம் ஆண்டு**

# சமாதானமாக வாழ்வதற்கு மக்கள் ஒன்றிணையவேண்டும்

## 2004 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி உலக சமாதான தினத்துக்கான பாப்பரசரின் செய்தி - ஒரு பார்வை

கத்தோலிக்க திருச்சபையானது 1967 ஆம் ஆண்டு 23 ஆம் அருளப்பர் பாப்பரசராக இருந்த காலம் முதல் ஒவ்வொரு ஆண்டின் முதல் தினத்தையும் உலக சமாதானதினமாகப் பிரகடனப்படுத்தி, உலக சமாதானத்திற்காகச் செபிக்கும்படியும், உழைக்கும்படியும் அழைப்பு விடுத்து வந்துள்ளது. 6 ஆம் சின்னப்பர் பாப்பரசரும், அவரைத் தொடர்ந்த மற்றைய பாப்பரசர்களும் இந்தச் சிறப்பான பணியைத் தவறாமல் மேற்கொண்டு வந்திருக்கின்றார்கள்.

தமது பணியின் 25 ஆண்டுகளை நிறைவுசெய்துள்ள பாப்பரசர் 2 ஆம் யோவான் பவுல் - கடந்த 25 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டின் முதல் தினத்திலும் உலக சமாதானத்திற்காகச் செபிக்கும்படியும், உலகில் சமாதானத்தை ஏற்படுத்த உழைக்கும்படியும் குரல்கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறார்.

இந்த ஆண்டு தமது 25 ஆவது உலக சமாதான தினச்செய்தியை, 'சமாதானத்தைப் போதிப்பது எல்லா நேரத்துக்குமான அர்ப்பணம்' என்னும் தலைப்பில் வெளியிட்டிருக்கிறார். உண்மையில் கடந்த 25 ஆண்டுகளாக அவர் வெளியிட்டு வந்த சமாதான தினச்செய்திகளின் சாரத்தைச் சாறுபிழிந்ததுபோல், இவ்வாண்டுச் செய்தி அமைந்திருக்கிறது என்று குரல்தரவல்ல வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள்.

கடந்த 25 ஆண்டுகளிலும் சமாதானத்தின் பல்வேறு நிறங்களை நாம் தெளிவாக விளக்கிவிட்டோம். இப்போது சமாதானமாக இருப்பதும், சமாதானமாக வாழுவதும் எமது தேவையாக இருக்கிறது. இனி சமாதானத்தைச் செயற்படுத்துவோம், வாழுவோம் என அவர் வேண்டிநிற்கிறார்.

1979 ஆம் ஆண்டு - இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னர், தமது முதலாவது சமாதான தினச்செய்தியை, 'சமாதானத்தை அடைய சமாதானத்தைப் போதியுங்கள்' என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட இந்த ஆண்டின் செய்தியின் தலைப்பிலும், 1979 ஆம் ஆண்டுச் செய்தியின் தலைப்பிலும் ஒற்றுமை இருப்பதை நாம் இங்கு நோக்கவேண்டும்.

இந்த ஆண்டுக்கான சமாதான தினச் செய்தி - ச்ர்வதேச சட்டம், 'சமாதானத்தின் ஒரு வழியாகும்' என்ற தலைப்பில் வெளியிடப்படும் என, வத்திக்கான் ஊடகங்கள் அறிவித்த பின்னரும், திருத்தந்தை அதன தலைப்பைச் 'சமாதானத்தைப் போதிப்பது எல்லா நேரத்துக்குமான அர்ப்பணம்' என மாற்றியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

திருத்தந்தை 2 ஆம் யோவான் பவுல் - சமாதானத்தைப் போதிப்பது, எல்லா நேரத்துக்குமான அர்ப்பணம் என்ற இந்த ஆண்டுச் செய்தியை, குறிப்பான விதமாகச் சமாதானததை தமது முக்கிய கடமையாகக் கொண்டுள்ள நாடுகளின் தலைவர்களுக்கும், சமாதான ஒப்பந்தங்களைச் செய்து, ச்ர்வதேச சட்டத் தன்மையை நிலைநாட்டும் சட்டத்தரணிகளுக்கும், இளைஞர்களுக்கும், சமாதானத்தைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் என விழித்து ஆரம்பிக்கிறார்.

2004 ஆம் ஆண்டின் ஆரம்பத் தினமான இன்றும் - சமாதானத்தை ஏற்படுத்தமுடியும். அது எமது கடமையாக இருக்கிறது என்று குரலெழுப்பும் எமது பணிவான வேண்டுகோளுக்குச் செவிசாயுங்கள். கடந்த 25 ஆண்டுகளாக எமது முன்னோரைப் பின்தொடர்ந்து இந்தத் தினததை சமாதான தினமாக அறிவித்து, சமாதானத்திற்கான அழைப்பை விடுத்துக்கொண்டே வந்திருக்கிறோம்.

25 ஆண்டுகளாகத் திருச்சபை முன்பாகவும், உலகின் முன்பாகவும், விசுவாசிகள் முன்பாகவும், நல்மனது படைத்த அனைத்து மனிதர்கள் முன்பாகவும் சமாதானத்துக்காக நாம் குரல்கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறோம். இன்று மீண்டும் ஒருதடவை எல்லாக் கண்டங்களில் வாழும் மக்களையும் - உலக சமாதானதினத்தைக் கொண்டாடும்படி அழைப்பு விடுகிறோம்.

எல்லாக் காலத்தையும்விட, இன்று மனித இனமானது சமாதானத்துக்கான பாதையை மீளக்கண்டு பிடிக்கவேண்டிய ஒரு தேவையில் இருக்கிறது. இன்று போரின் அனர்த்தங்களின் நடுவில், மூவாயிரம் ஆண்டின் ஆரம்பத்தில், உலகெங்கும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளிலும் இரத்தக்களரி ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இந்தவேளையில், எல்லாக் காலத்தையும்விட சமாதானத்தின் பாதையை நாம் கண்டடைய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மக்கள் எல்லோரும் சமாதானத்தில் நம்பிக்கை இழந்து, போரின் முகத்திலே, அதன் துயரங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றவேளையில், திருச்சபையானது சமாதானத்தைப் போதித்துக்கொண்டு இருக்கிறது. சமாதானம் சாத்தியமானது என்பதை திரும்பத்திரும்ப வலியுறுத்தி வருகிறது. சமாதானத்தை ஏற்படுத்துவது எமது கடமை என்பதைத் திரும்பத்திரும்ப அறிவிப்பதில் திருச்சபை சோர்ந்து போய்விடவில்லை.

23 ஆம் அருளப்பர் பாப்பரசர்- 'உலகில் அமைதி' என்ற தலைப்பில் வெளியிட்ட திருமடலில் தெரிவிக்கும் நான்கு தூண்களிலே - சமாதானம் கட்டியெழுப்பப்படவேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம். உண்மை, நீதி, அன்பு, சுதந்திரம் என்கின்ற அந்த நான்கு தூண்களின்மேல்தான் சமாதானம் கட்டியெழுப்பப்படவேண்டும். ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்ட காரணங்களை நாம் அறிவோம். எம்மைத் தொடர்ந்துவரும் மனித சமுதாயத்தைப் போரின் அழிவிலிருந்து காப்பற்றவேண்டும் என்ற அழைப்பு - எமக்கு எப்போதும் ஒரு பெரிய அழைப்பாக இருக்கிறது.

உண்மையான சமாதானத்தை உலகில் நிறுவவேண்டுமானால், நீதியானது - அன்பினால் கட்டாயமாக நிறைவுசெய்யப்பட வேண்டும். நீதியும், அன்பும் சிலவேளைகளில் எதிரெதிர் சக்திகளாக அமைந்திருப்பதுபோல எமக்குத் தோன்றலாம். ஆனால், உண்மையில் அவை ஒரு உண்மைத் தன்மையின் இரண்டு முகங்கள், மனித உயிரின் ஒன்றிணைக்கப்படவேண்டிய இரு பரிமாணங்கள்.

கிறிஸ்தவர்களும், நன்மனதுள்ள அனைவரும் - பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மன்னிப்புத் தேவையாக இருக்கிறது. மன்னிப்பின்றி சமாதானம் இருக்கமுடியாது. பலஸ்தீனத்திலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் நடக்கும் யுத்த நிகழ்வுகளே இப்போ என் நினைவுகளாயிருக்கின்றன.



சமாதானத்தைப் பற்றிப் போதுமானளவு கடந்தகாலம் முழுவதும் பலகோணங்களில் விளக்கம் தந்தாகிவிட்டது. இப்போ மிஞ்சியிருப்பதெல்லாம் சமாதானமாக வாழ்வதற்கு உழைப்பதாகும். மக்கள் எல்லோரும் ஒன்றிணைந்து வாழவேண்டும். கிறிஸ்தவமதத்தின் மையமான சமாதானத்தை எமக்கும், மற்றவர்களுக்கும் போதிக்கவேண்டிவர்களாக இருக்கிறோம். சமாதானத்தைப் போதிப்பது என்பது கிறிஸ்துவையே போதிப்பதாக இருக்கிறது. அவரின் நற்செய்தியை அறிவிப்பதென்பது - சமாதானத்தின் செய்தியை அறிவிப்பதாக இருக்கிறது. சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர். ஏனெனில், அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர் (மத்.5:9) என்ற மலைப்பொழிவின்படி, சமாதானத் தூதுவர்களாக நாம் உழைக்க வேண்டியிருக்கிறது எனத் திருத்தந்தையின் செய்தி நிறைவடைகிறது.

**வாழ்க வளமுடன்**

**இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

**மூன்றாவது அகவையில்**



பெயர் : ச?திரன்யா
முகவரி : மடுமாதா கோயிலடி, அல்வை.

**நான்காவது அகவையில்**



பெயர் : ஆ.கௌரிசன்
முகவரி : இன்பர்சிட்டி, பருத்தித்துறை.

**ஏழாவது அகவையில்**



பெயர் : கோ.மயூரி
முகவரி : சங்கவீதி, துன்னாலை.

**எட்டாவது அகவையில்**



பெயர் : இ.பிறின்சன் தேவரட்ணம்
முகவரி : ஐயனார் கோயிலடி, நாவற்குழி.

**பத்தாவது அகவையில்**



பெயர் : வி.ஜெனனி
முகவரி : டெனிமகால்,

**சின்னஞ்சிறு செய்திகள்**

### புதிய நிர்வாகிகள் தெரிவு

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய 2004 ஆம் ஆண்டு புதிய நிர்வாகிகள் தெரிவு, அண்மையில் நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தலைவராக வ.வரதாபன், செயலாளராக வீ.பிரசன்னா, பொருளாளராக ஜெ.மிஷாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (55)

### நிலாக்கால தெய்வீகக் கருத்தரங்கு

கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள இராஜயோக நிலையத்தில், ஒவ்வொரு பௌர்ணமி தினங்களிலும் தெய்வீகக் கருத்தரங்கு இடம்பெற்று வருகின்றது.

இந்தக் கருத்தரங்கில் - தியானத்தின் தேவை, இராஜயோக நிலையத்தின் சேவை, யோகாசனத்தின் நன்மைகள் போன்றவை பற்றி விளக்கமளிப்பதோடு, தியானப் பயிற்சிகளும், யோகாசனப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

இந்தக் கருத்தரங்கில் ஏராளமா[illegible] னவர்கள் மிக்க ஆர்வமுடன் கலந்[illegible] கொண்டு நன்மையடைகின்றார்[illegible]

### வருடாந்த ஒன்றுகூடல்

(சுதுமலை)

சாவகச்சேரி பனை தென்[illegible] வள அபிவிருத்திச் கூட்டுறவுச்[illegible] கத்தின் வருடாந்த ஒன்றுகூட[illegible] விருந்துபசார நிகழ்வும் - சங்க[illegible] பொது முகாமையாளர் வே.கிரு[illegible] தலைமையில் எதிர்வரும் 10[illegible] திகதி காலை சங்கமண்டப[illegible] ஆரம்பமாகும்.

விருந்துபசார நிகழ்வுடன் கல்[illegible] திகாரி சௌந்தரநாயக[illegible] கௌரவிப்பும் இடம்பெறவு[illegible] சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (91)

## கரவெட்டி பிரதேச சபையில் நடைபெற்ற எய்ட்ஸ் சேவைநலன் பாராட்டு நிகழ்வு

கரவெட்டி பிரதேசசபை அலுவலக கேட்போர்கூட மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு வடமராட்சி கோட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகன் தலைமையில் எய்ட்ஸ் விழிப்புணர்வு வார சேவை நலன் பாராட்டுப்பத்திரம் வழங்கல் நிகழ்வு - 2 நிமிட மௌன வணக்கத்துடன் ஆரமபமானது.

இந்த நிகழ்வின்போது, பொதுச் சுடரினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் மதன்ராஜ், வடமராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா, வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் இராசேந்திரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய தாயகன் - இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தினை எடுத்துரைத்தார். தொடர்ந்து வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் இராசேந்திரன், ப.நோ.கூ.சங்க தலைவர் ஏகாம்பரமூர்த்தி, பதில் பிரதேச செயலாளர் சுவாமி, அரசியற்துறைப் துணைப் பொறுப்பாளர் தங்கன் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

சிறப்புரையின்போது எய்ட்ஸ் விழிப்புணர்வு வாரச் செயற்பாடுகளில் முன்னின்று செயற்பட்டவர்களுக்கு நன்றி தெரிவித்ததுடன், இறுதியில் வடமராட்சி முன்பள்ளி கல்விப் பணிப்பாளர் துரைசத்தியசீலனின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

### சந்நிதியான் ஆச்சிரம நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை வாராந்தம் நடத்தும் நிகழ்ச்சித் தொடரில், நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் வருடாந்த திருவாசக விழா நடைபெறவுள்ளது. (44)




பருத்தித்துறை பிரதேச சபையினால் நடாத்தப்பட்ட உலக உணவு தினத்தில் பாடசாலை மாணவர்களுக்குப் பருத்தித்துறை பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.அருட்செல்வம் இலைக் கஞ்சி வழங்குவதைப் படத்தில் காணலாம் (17)



கியூடெக் நிறுவனத்தின் தாவடி சிறுவர் சமாதானக் குழுவினால் நடத்தப்பட்ட சமாதானத்திற்கான ஒளியேற்றல் நிகழ்வில் ரவிசர்மா குருக்கள் ஒளியேற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம். (91)

# இஸ்ரேல் படையினரின் ஹெலித்தாக்குதலில்; பதினொரு பலஸ்தீன பொதுமக்கள் படுகாயம்!

(காஸா)

காஸாவிலுள்ள 'செக்பக் ரட்வன்' நகரில் பேருந்து ஒன்றின் மீது இஸ்ரேல் படையினர் ஹெலிகொப்டர் ஒன்றில் இருந்து நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 11 பலஸ்தீனப் பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் தாக்குதலுக்குள்ளான பேருந்து அருகாமையில் நின்றவர்கள் என அறிவிக் கப்பட்டுள்ளது.

இதனிடையே, தாக்குதலுக்குள்ளான பேருந்தில் தமது அமைப்பைச் சேர்ந்த இருவர் பிரயாணம் செய்ததாக கமாஸ் தெரிவித்துள்ளது. மேலும் பிரயாணிகள் வெளியேறுவதற்காக வண்டி நிறுத்தப்பட்ட பின்பே இந்தத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதாகவும், தொடர்ந்து இரண்டாவது தாக்குதல் நடத்தப்பட்டபோது, அருகாமையில் நின்றவர்கள் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் கமாஸின் இராணுவப்பிரிவின் தலைவர் ஜமால் ஜராச் காயமடைந்தார் என பலஸ்தீனப் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.



கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து, காமாஸிற்கு எதிரான தாக்குதல்களை இஸ்ரேல் நிறுத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## சிரிய எல்லையில் அமைந்த

# யூதக் குடியேற்றங்களை விரிவுபடுத்த இஸ்ரேல் முடிவு

1967 ஆம் ஆண்டு சிரியாவிற்கும், இஸ்ரேலுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்தின் போது சிரியாவின் கோலான்குன்று பிரதேசம் இஸ்ரேலுடன் இணைக்கப்பட்டு குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த இடத்தில் அமைந்துள்ள யூதக் குடியிருப்புக்களை இருமடங்காக்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக இஸ்ரேலின் விவசாய அமைச்சர் ஜிஷ்ரியல் சாற்ஷ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிரியன் ஜனாதிபதி 'பசார் அல் அகமட்' கோலான் குன்றை தம்மிடம் திரும்பவும் கையளிக்குமாறு கோரி, பேச்சுவாாத்தைக்கு விருப்பம் தெரிவித்திருந்தார். ஆனால் இஸ்ரேலினால் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ள யூதக்குடியிருப்புக்கள் தொடர்பாக சிரியாவோ, அமெரிக்காவோ எதுவித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை.

உலக நோக்கு


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
சிற்றி மெடிக்கல்ஸ்
487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-2000)


# ஈரான் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்க அரசு உதவிகளை வழங்கியுள்ளது



ஈரானில் 1979 ஆம் ஆண்டு ஏற்பட்ட இஸ்லாமியப் புரட்சியின் பின் அமெரிக்கா அவற்றுடன் உறவுகளை நிறுத்தியிருந்தது. தற்போது ஈரானில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியின் பின் மீண்டும் உதவிப் பணிகளுக்கென, தனது பிரதிநிதிகளை அனுப்பியுள்ளது.

40 நாடுகளைச் சேர்ந்த உதவிப் பணியாளர்கள் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமைபுரிந்து வருகின்றனர். அமெரிக்காவின் உதவி தொடர்பாக, கருத்துத் தெரிவித்த ஈரானிய ஜனாதிபதி மொகமட் கதாமி அமெரிக்காவின் பங்களிப்பை வரவேற்ற போதிலும் இரு நாடுகளிடையேயான உறவுகளில் மாற்றம் ஏற்படாது எனத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் உதவிப்பணிக்கென ஈரான் வந்துள்ள குழுவில் 80 அங்கத்தவர்கள் உள்ளதாகவும், இவர்கள் வைத்தியசாலைகளை நிர்மானிப்பதில் முதலில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். அமெரிக்காவின் உதவிப்பணிகளில் ஈடுபட்டுள்ள டேவி பேக் பி.பி.ஸிக்குத் தெரிவிக்கும் போது, அமெரிக்க அரசின் சார்பாக ஈரானிய மக்களுக்கு உதவவந்துள்ளதை தாம் மரியாதைக்குரிய செயலாக கருதுவதாகவும், இது அரசியல் தொடர்பற்ற மனிதநேய செயற்பாடென இவர்



கூறியுள்ளார்.

இதனிடையே ஈராக்கும், 55 வரையான வைத்திய பணியாளர்



களையும், அவசர தேவைகளுக்கான உதவிப்பொருட்களையும் அனுப்பியுள்ளது.

1980 ஆம் ஆண்டுகளில் இரு நாடுகளிடையேயும், 8 ஆண்டுகள் போர் நடைபெற்றது. சதாம் ஹுசைனின் பதவி விலகலின் பின் தற்போது இரு நாடுகளுக்குமிடையேயான உறவுகள் சீரடைந்துள்ளன.


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எம் இனிய புதுவருட
நல்வாழ்த்துக்கள்
உங்கள் அழகு எங்கள் கைகளில்!
★ நவநாகரிக பிறேம்களிலான மூக்குக்கண்ணாடி
★ மிதப்புப் பற்களுக்கு கிளிப் பொருத்துதல்
★ முக அமைப்புக்கேற்ப கட்டுப் பல் வரிசை
இவை அனைத்துக்கும் நீங்கள்
நாடவேண்டிய இடம்
எரிக்கணேஷ்
மூக்குக் கண்ணாடி அகமும் பல் கட்டுமிடமும்
✦ 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
T.P:- 2222486
✦ 91, கே.கே.எஸ்.றோட்,
கொக்குவில் சந்தி
✦ பழைய பொலிஸ் நிலையம் முன்பாக,
81, பிரதான வீதி, சுன்னாகம்
(சி.'.1997)


# கூட்டணி அமைப்பது தொடர்பாக கருணாநிதி–வாசன் சந்தித்துபேச்சு

(சென்னை)

நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தைகள் இன்னும் 2 அல்லது 3 நாட்களில் தொடங்கும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தி.மு.க தலைவர் கருணாநிதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியது, காங்கிரஸ் தொண்டர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

